# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2346/02 - 2023 අගෝස්තු මස 21 වැනි සඳුදා - 2023.08.21

*2346/02 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 203/33* (VIII)

**(451ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டம்**

*(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 24(1) (ஞ), (ட) மற்றும் (ண) என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 64(2) (ஊ) என்னும் பிரிவின்கீழ் தனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

சட்டத்தரணி பவித்ரா வண்ணிஆரச்சி,
வனசீவராசிகள் மற்றும் வனவளப்
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2022.08.11.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெட்டுமரம், காட்டு மர இன விதைகள் அல்லது வேறு காட்டு விளைபொருளை ஏற்றுமதிசெய்தல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

*2.* ஆளெவரும் ஏதேனும் வெட்டுமரத்தை, காட்டு மர இன விதைகளை அல்லது வேறு காட்டு விளைபொருளை காடு பேணுநர் தலைமையதிபதியினால் அல்லது அதன்சார்பில் காடுபேணுநர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் அத்தகைய நோக்கத்துக்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர ஏற்றுமதிசெய்தலாகாது.

*3.* (அ) வெட்டுமரத்தை ஏற்றுமதிசெய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் தரப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்; அத்துடன்



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) காட்டு விளைபொருள் மற்றும் காட்டு மர இன விதைகளை ஏற்றுமதி செய்வதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் தரப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன்,

காடு பேணுநர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

4. (அ) வெட்டுமரத்தை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை III இல் தரப்பட்ட படிவத்தில் பொருளளவில் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) காட்டு விளைபொருள் மற்றும் காட்டு மர இன விதைகளை ஏற்றுமதிசெய்வற்கான அனுமதிப்பத்திரம் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை IV இல் தரப்பட்ட படிவத்தில் பொருளளவில் இருத்தல் வேண்டும்.

5. காடு பேணுநர் தலைமையதிபதி அல்லது காடு பேணுநர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் நியாயமான எந்நேரத்திலும் ஏற்றுமதிக்குத் தயாராகவுள்ள ஏதேனும் வெட்டுமரத்தை, காட்டு மர இன விதைகளை அல்லது வேறு காட்டு விளைபொருளை சோதனையிடலாம்.

6. எவரேனும் காட்டு அலுவலரினால், காடு பேணுநர் தலைமையதிபதியினால் அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால், உப பரிசோதகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவிவரிசையில் உள்ள எவரேனும் பொலிசு அலுவலரினால் அல்லது சுங்க கட்டளைச்சட்டத்தின் கீழ் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் கோரப்படுமிடத்து ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரத்தை சோதனைக்காக காண்பிப்பதும் அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருப்பவரின் அறிவுக்குட்பட்டவாறாக எந்த ஏற்றுமதிசெய்யப்பட்டவேண்டிய வெட்டுமரம், காட்டு மர இன விதைகள் அல்லது வேறு காட்டு விளைபொருள் தொடர்பில் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வெட்டுமரம், காட்டுமர இன விதைகள் அல்லது வேறு காட்டு விளைபொருள் தொடர்பான அத்தகைய எல்லாத் தகவல்களையும் அத்தகைய அலுவலர் வழங்குமாறு அவரைத் தேவைப்படுத்தும் போதெல்லாம் அவ்வாறு வழங்குவது அத்தகைய அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.

7. இவ்வொழுங்குவிதிகளில்-

"காடு பேணுநர் தலைமையதிபதி" என்பது, கட்டளைச்சட்டத்தின் நியதிகளின் படி நியமிக்கப்பட்ட காடு பேணுநர் தலைமையதிபதி எனப் பொருள்படும் என்பதுடன் மேலதிக காடு பேணுநர் தலைமையதிபதி ஒருவரையும் உள்ளடக்கும்;

"காட்டு விளைபொருள்" என்பது-

(அ) மரங்கள், இலைகள் மற்றும் பழங்கள், விதைகள், வேர்கள், சாறு, வெட்டுமரம், கரி, இயற்கை இறப்பர், காசுக்கட்டிகள், மர எண்ணெய், பிசின், இயற்கை வானிசு, மரப்பட்டை, அரக்கு, பசை மற்றும் மைரபோலன்சு எனப்பொருள்படும்;

(ஆ) புற்கள், படர்கொடிகள், ஏறுகொடிகள் மற்றும் பாசிகள் உட்பட மரங்கள் அல்லாத தாவரங்கள் மற்றும் அத்தகைய தாவரங்களின் எல்லாப் பாகங்களும் அல்லது விளைப்பொருள் என பொருள்படும்;

(இ) சுரங்கங்கள் மற்றும் கற்குழிகளிலிருந்து தோற்றுவிக்கப்படும் எல்லாப் பொருட்களும் உட்பட கல்லாக்கப்பட்ட சேதனப் பொருள், மேற்பரப்பு மணல், கற்கள் மற்றும் கனிப்பொருட்கள் எனப் பொருள்படும் என்பதுடன் சுண்ணாம்புக் கற்கள், முருகைக்கல், செம்பூரான்கல், பிற்றுமன், பிற்றுமன் கலவை, அஸ்பால்ற், கனிப்பொருள் எண்ணெய் என்பவற்றை உள்ளடக்கும்.

"கட்டளைச் சட்டம்" என்பது (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டம் எனப்பொருள்படும்;

"காட்டு மர இன விதைகள்" என்பது, கட்டளைச்சட்டத்தின் அட்டவணை I இல் அல்லது அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட மரங்களுள் எவற்றினதும் பழங்களின் விதைகள் மற்றும் தனதுசொந்த இனங்களை மீளுருவாக்குவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ள அல்லது ஆற்றலைக் கொண்டிராத, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு எவையேனும் மரங்களின் உற்பத்தி எனப்பொருள்படும்;

*8. 2000 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந1161/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காட்டு ஒழுங்குவிதிகள், அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் மாற்றியமைக்கப்படுகின்றது.*

**அட்டவணை I**

(ஒழுங்குவிதி 3(அ))

**வெட்டுமரத்தை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரமொன்றுக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி

(தனிநபர்/கம்பனி )

| அலுவலக உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| விண்ணப்ப இலக்கம் : | |
| பெற்றுக்கொண்ட திகதி : | |
| வழங்கப்பட்ட திகதி: | |

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் / வியாபார பதிவு இல. :

| | |
|---|---|
| தே.அ.அ.இல: | |
| கடவுச்சீட்டு இல: | |
| வியாபார பதிவு இல: | |
| தொடர்பு இல: | |

3. காட்டு திணைக்கள வெட்டுமரச்சாலைப் பதிவு இல. மற்றும் வியாபாரத்தின் தன்மை.

| | |
|---|---|
| வனப் பரிபாலன திணைக்கள பதிவு இலக்கம் | வெசா/…………/…….. |
| வியாபாரத்தின் தன்மை: | |

4. ஏற்றுமதி செய்யப்படவேண்டிய பொருட்கள் பற்றிய விபரம்

| *விடயம்* | *மர இனம்* | *நீளம் (செ.மீ.)* | *அகலம் (செ.மீ.)* | *தடிப்பம்/ உயரம் (செ.மீ.)* | *துண்டுகளின் எண்ணிக்கை* | *கனவளவு (மீ³)* |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| மொத்தம் | | | | | | |

5. வெட்டுமரம் பெறப்பட்டுள்ள காணிச் சொந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி.

5.1. உரித்துறுதி மற்றும் வரைபட இல:

| | |
|---|---|
| உரித்துறுதி | |
| வரைபட இல: | |

5.2. பொருட்கள் வியாபாரி ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருப்பின், வியாபாரியின் பெயர் மற்றும் முகவரி

6. பண்டகசாலையின் பெயர் மற்றும் முகவரி

7. ஏற்றுமதி செய்யப்படும் நாடு

8. பெறுநரின் பெயர் மற்றும் முகவரி.

9. ஏற்றுமதியின் நோக்கம்.

10. கப்பலேற்றுகை எண்ணிக்கை/ கொள்கலன்களின் அளவு

| *கொள்கலன் இனம்* | *20' கொள்.* | *40' கொள்.* | *20 அடிக்கு குறைந்த* | *வான் கொள் கலன்* |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | | | | |

11. எதிர்பார்க்கப்பட்ட ஏற்றுமதித் திகதி

**இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் எனது / எங்களது அறிவுக்கெட்டிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் / நாங்கள் சான்றுப்படுத்துகின்றேன் / சான்றுப்படுத்துகின்றோம்.**

…………..……..………………… ……………………………
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

**வெட்டுமர ஏற்றுமதி தொடர்பில் விண்ணப்பதாரரின் கூற்று**

விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி : ………………………………………………………………………………………

ஏற்றுமதிசெய்யப்படும் நாடு : ………………………………………………………………..……………………………………..

போக்குவரத்து அனுமதிப்பத்திர இலக்கம் மற்றும் திகதி: ……………………………………………………………….……………..
(அனுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதி விண்ணப்பங்களுடன் இணைக்கப்படுதல் வேண்டும்)

மர உற்பத்திப் பொருட்கள் பற்றிய நிரல்:

| *இல.* | *விடயம்* | *மர இனம்* | *அளவீடுகள்* | | | *துண்டுகளின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|---|---|
| | | | *நீளம் (செ.மீ.)* | *அகலம் (செ.மீ.)* | *தடிப்பம்/ உயரம் (செ.மீ.)* | |
| *01* | | | | | | |
| *02* | | | | | | |
| *03* | | | | | | |
| *04* | | | | | | |
| *05* | | | | | | |
| *06* | | | | | | |
| *07* | | | | | | |
| *08* | | | | | | |
| *09* | | | | | | |
| *10* | | | | | | |
| *11* | | | | | | |
| *12* | | | | | | |
| *13* | | | | | | |
| *14* | | | | | | |
| *15* | | | | | | |
| *16* | | | | | | |
| *17* | | | | | | |
| *18* | | | | | | |
| *19* | | | | | | |
| *20* | | | | | | |
| | மொத்தம் | | | | | |

**மேலே என்னால் / எங்களால் கொடுத்துதவப்பட்ட தகவல்கள் எனது / எங்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் அவை தொடர்பில் எவையும் மறைக்கப்படவில்லை அல்லது வெளிப்படுத்தப்படாது இருக்கவில்லை எனவும் நான் / நாங்கள் சான்றுப்படுத்துகின்றேன் / சான்றுப்படுத்துகின்றோம். என்னால் / எங்களால் வழங்கப்பட்ட பிழையான அல்லது பொய்யான தகவல்கள் காரணமாக ஏற்றுமதி செய்யப்படமுடியாதிருப்பின் காடு பேணற்திணைக்களம் எவ்வித பொறுப்புக்களையும் ஏற்காது அல்லது எவ்வழியிலும் தலையிடாது என நான் / நாங்கள் அறிகிறேன் / அறிகிறோம்.**

திகதி: …………………..

……………………………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்

பெயர் :……………………………………

அடையாள இல.:…………………………

**அட்டவணை II**

(ஒழுங்குவிதி 3(ஆ))

**காட்டு மர இன விதைகள் அல்லது வேறு காட்டு விளைபொருளை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கான விண்ணப்பம்**

| அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும் | |
|---|---|
| **விண்ணப்ப இல:** | |
| **பெறப்பட்ட திகதி:** | |
| **வழங்கப்பட்ட திகதி:** | |

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி (தனிநபர்/கம்பனி)

2. தேசிய அடையாள அட்டை இல.:/ வியாபார பதிவு இல.:/ கடவுச்சீட்டு இல.:

| | |
|---|---|
| தே.அ.அ.இல: | |
| கடவுச்சீட்டு இல: | |
| வியாபார பதிவு இல. | |
| தொடர்பு இல. | |

3. நாற்றுமேடைப் பதிவு இல.

4. ஏற்றுமதி செய்யப்பட வேண்டிய பொருட்கள் பற்றிய விபரம்

| பொதுப் பெயர் | தாவரவியற் பெயர் | அளவு/ நிறை | தொகை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

| பொதுப் பெயர் | தாவரவியற் பெயர் | அளவு/ நிறை | தொகை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| மொத்தம் | | | |

5. பொருட்கள் எங்கிருந்து சேகரிக்கப்பட்டது/ கொள்வனவு செய்யப்பட்டது.

5.1. பொருட்கள் அரச காணியிலிருந்து சேகரிக்கப்படின், சேகரிப்பதற்கான அனுமதிப்பத்திர இல. மற்றும் திகதி

5.2. பொருட்கள் வியாபாரி ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் வியாபாரியின் பெயர் மற்றும் முகவரி

6. பண்டகசாலையின் பெயர் மற்றும் முகவரி

7. சென்றடையும் நாடு மட்டும் இடம்

8. பெறுநரின் பெயர் மற்றும் முகவரி

9. ஏற்றுமதியின் நோக்கம்.

10. கப்பலேற்றுகை எண்ணிக்கை/ கொள்கலன்களின் அளவு

| *அளவு* | *20’ கொள்.* | *40’ கொள்.* | *கொள்கலன் சுமைக்குக் குறைந்தவை* | *வான் சரக்குக் கட்டணம்* |
|---|---|---|---|---|
| எண்ணிக்கை | | | | |

11. எதிர்பார்க்கப்பட்ட ஏற்றுமதித் திகதி

**இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் எனது / எங்களது அறிவுக்கெட்டிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் நான் / நாங்கள் சான்றுப்படுத்திகின்றேன் / சான்றுப்படுத்துகின்றோம்.**

……….……..……………… ………………………….

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

**காட்டுமர இன விதைகள் மற்றும் காட்டு விளைபொருளின் ஏற்றுமதி தொடர்பில் விண்ணப்பதாரரின் கூற்று**

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி : …………………………………………………………………………
2. சென்றடையும் நாடு : ………………………………………………………………………………………
3. காடு பேணற்திணைக்கள பதிவு இல. : ……………………………………………………………………
4. ஏற்றுமதி செய்யப்படவேண்டிய தாவரங்கள் அல்லது அவற்றின் பாகங்கள் அல்லது பொருட்கள் பற்றிய விபரம்: ……………………………………..

| இல. | தாவரங்களின் பொதுப் பெயர் | தாவரவியற் பெயர் | அளவீடுகள் | | துண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | உயரம் (மீ.) | நிறை (Kg) | |
| 01 | | | | | |
| 02 | | | | | |
| 03 | | | | | |
| 04 | | | | | |
| 05 | | | | | |
| 06 | | | | | |
| 07 | | | | | |
| 08 | | | | | |
| 09 | | | | | |
| 10 | | | | | |
| 11 | | | | | |
| 12 | | | | | |
| 13 | | | | | |
| 14 | | | | | |
| 15 | | | | | |
| 16 | | | | | |
| 17 | | | | | |
| 18 | | | | | |
| 19 | | | | | |
| 20 | | | | | |
| | மொத்தம் | | | | |

**மேலே என்னால் / எங்களால் கொடுத்துதவப்பட்ட தகவல்கள் எனது / எங்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் அவை தொடர்பில் எவையும் மறைக்கப்படவில்லை அல்லது வெளிப்படுத்தப்படாது இருக்கவில்லை எனவும் நான் / நாங்கள் சான்றுப்படுத்துகின்றேன் / சான்றுப்படுத்துன்றோம். என்னால் / எங்களால் வழங்கப்பட்ட பிழையான அல்லது பொய்யான தகவல்கள் காரணமாக ஏற்றுமதி செய்யப்படமுடியாதிருப்பின் காடு பேணற்திணைக்களம் எவ்வித பொறுப்புக்களையும் ஏற்காது அல்லது எவ்வழியிலும் தலையிடாது என நான் / நாங்கள் அறிகிறேன் / அறிகிறோம்.**

திகதி: …………………..

………………………………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்

பெயர்:…………………………………………..

அடையாள இல:…………………………………

**அட்டவணை III**

(ஒழுங்குவிதி 4(அ))

**அனுமதிப்பத்திர இல.:** **திகதி.**
**திகதி**

**வெட்டு மரத்தை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம்**
(இலங்கையினுள் இடம்பெயர்த்துவதற்கு செல்லுபடியாகாது, கைமாற்றத்தகாதது)

பற்றுச்சீட்டு இல.: ………….
தொகை ரூபா: …………
ஏற்றுமதி செய்யப்படவேண்டிய வெட்டுமரம்:

வெட்டு மரத்தின் மீது இடப்பட்டுள்ள அடையாளக்குறி

| இல. | வெட்டுமர இனம் | விடயம் | நீளம் *(செ.மீ.)* | அகலம் *(செ.மீ.)* | உயரம் *(செ.மீ.)* | துண்டுகளின் எண்ணிக்கை | கனவளவு ($மீ^3$) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | **மொத்தம்** | | | | | | |

விண்ணப்பதாரரின் பெயர்: ……………………………………………………………………………………………

முகவரி: ……………………………………………………………………………………………………………

தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு இல. : ……………………………………………………………………..

பொருட்கள் பெறப்பட்ட காணியின் பெயர் மற்றும் அமைவிடம்: ……………………………………………………

பொருட்கள் அரச காணியிலிருந்து சேகரிக்கப்படின், அனுமதிப் பத்திர இல.: ………………………………………

வழங்கிய அலுவலரின் பெயர் / பதவி: ……………………………………………………………………………

(பயன்படுத்தப்பட்ட/புதிய) பொருட்கள், வெட்டுமரச் சாலையொன்றிலிருந்து / தளபாட விற்பனை நிலையத்திலிருந்து சேகரிக்கப்படின்/ கொள்வனவு செய்யப்படின், காடு பேணற்திணைக்கள பதிவு இல.:

……………………………………………………………………………………………………………………

………………………….என்னும் நிறுவனத்திற்கு மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களை இலங்கையிலிருந்து …………………….. இற்கு ஏற்றுமதிசெய்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

*(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 24 (1)(ஞ) என்னும் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகளின்* ………………………… ஆம் இலக்க ஒழுங்குவிதியைப் பார்க்கவும் **(மறுபக்கத்திலுள்ள நிபந்தனைகளைப் பார்க்கவும்)**.

இவ்வனுமதிப்பத்திரம்…/…/…. இருந்து …/…./….. வரை ஏற்றுமதிசெய்வதற்காக செல்லுபடியாகும்.

வழங்கப்பட்ட திகதி: ……/……/…… கப்பலேற்றுகை எண்ணிக்கை: (……….)

………………………..
கையொப்பம்
காடு பேணுநர் தலைமையதிபதிக்காக.

*பிரதி* :

**1. பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கை சுங்கம் - தகவலுக்காகவும் அவசியமான நடவடிக்கைக்காகவும்**
**2. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர்.**

<u>நிபந்தனைகள்</u>

(1) ஏதேனும் அனுமதிப்பத்திரம் ஏற்றுமதிக்காக வழங்கப்படும் போது, காடுபேணுநரினால் அல்லது வேறு எவரேனும் காட்டு அலுவலரினால் அல்லது எவரேனும் சுங்க அலுவலரினால் கோரப்பட்டதன் மீது சோதனைக்காகவும் புறக்குறிப்பிடுகைக்காகவும் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை காண்பிப்பது ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.

(2) இவ்வனுமதிப்பத்திரம் கைமாற்றத்தகாததாகும்.

(3) அனுமதிப்பத்திரம் தொடர்பான பொருட்களை காண்பிக்குமாறு மேலே (1) ஆம் நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட அலுவலரொருவரினால் கோரப்படுகின்றபோதான ஏதேனும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பொருட்களை சோதனைக்காக காண்பிப்பது அல்லது காண்பிக்கச் செய்விப்பது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.

(4) அனுமதிப்பத்திரத்தை வழங்கும் அலுவலர் ஏதேனும் சந்தர்ப்பத்தில் தகுதியானதெனக் கருதுகின்றவாறு அவரது கையொப்பம் மற்றும் பதவி முத்திரை மூலம் உரிய முறையில் மெய்யுறுதிப்படுத்தப்பட்ட ஏதேனும்/ எவையேனும் மேலதிக நிபந்தனை / நிபந்தனைகளை விதித்தால், அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் அவ்வாறு விதிக்கப்பட்ட அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(5) ஏற்றுமதிசெய்யப்பட்ட பொருட்கள் மரக்குற்றி அல்லது அரியப்பட்ட வெட்டுமரமாகவிருப்பின், அனுமதிப்பத்திரத்தில் குறித்துக்காட்டப்பட்ட அடையாளக்குறி அரியப்பட்ட வெட்டுமரம் அல்லது மரக்குற்றியின் மீதும் காணப்படுதல் வேண்டும்.

***(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 24 (1)(ஞ) என்னும் பிரிவின்கீழ் இயற்றப்பட்ட மேலேயுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு அமைந்தொழுகுவதற்கு உடன்படுகின்றேன்.***

……………………………………….. ……………………………………………...........

**திகதி** **அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கையொப்பம்**

## அட்டவணை IV

(ஒழுங்குவிதி 4)

அனுமதிப்பத்திர இல. : ………………..                                    திகதி

**காட்டு மர இன விதைகள் மற்றும் காட்டு விளைபொருளை ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரம் (இலங்கையினுள் இடம்பெயர்த்துவதற்கு செல்லுபடியாகாது, கைமாற்றத்தகாதது)**

**பற்றுச்சீட்டு இல. : ……………………**

**தொகை ரூபா: …………**

**வெட்டுமரத்தின் மீது இடப்பட்டுள்ள அடையாளக் குறி**

**தாவரங்கள் அல்லது வேறு காட்டு விளைபொருள்**

| *இல.* | *பொதுப் பெயர்* | *தாவரவியற் பெயர்* | *அளவு / அகலம் (மொத்தம்)* | *தாவரங்கள் / பாகங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| | | | | |
| | **மொத்தம்** | - | - | |

விண்ணப்பதாரரின் பெயர்: …………………………………………………………………………………………

முகவரி**:** ………………………………………………………………………………………………..

தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு இல.**:** ……………………………………………..

பொருட்கள் பெறப்பட்ட காணியின் பெயர் மற்றும் அமைவிடம்: ……………

பொருட்கள் அரச காணியிலிருந்து சேகரிக்கப்படின், அனுமதிப்பத்திர இல. : ………………………

வழங்கிய அலுவலரின் பெயர் / பதவி: ……………………………………………...

தாவரம் அல்லது காட்டு விளைபொருள் நாற்றுமேடை ஒன்றிலிருந்து சேகரிக்கப்படின் / கொள்வனவு செய்யப்படின், காடு பேணற்திணைக்களப் பதிவு இல.: …………………………………………

**…………………** என்னும் நிறுவனத்திற்கு மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களை இலங்கையிலிருந்து …………… இற்கு ஏற்றுமதி செய்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றது.

*(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 24(1)(ஞ) என்னும் பிரிவின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகளின்* ……………............ ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும். **(மறுபக்கத்திலுள்ள நிபந்தனைகளைப் பார்க்கவும்).**

இவ்வனுமதிப்பத்திரம்……/…/….. இலிருந்து ……/……/….. வரை ஏற்றுமதிசெய்வதற்காக செல்லுபடியாகும்.

வழங்கப்பட்ட திகதி**: ……/……/……** கப்பலேற்றுகை எண்ணிக்கை: **(……….)**

…………………………

கையொப்பம்

காடு பேணுநர் தலைமையதிபதிக்காக

*பிரதி*:

**1.பணிப்பாளர் தலைமையதிபதி, இலங்கை சுங்கம் - தகவலுக்காகவும் அவசியமான நடவடிக்கைக்காகவும்**

**2.பணிப்பாளர், விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையம், விவசாயத் திணைக்களம் - தகவலுக்காகவும் அவசியமான நடவடிக்கைக்காகவும்**

**3.தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை - தகவலுக்காகவும் அவசியமான நடவடிக்கைக்காகவும்**

**4.இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் - தகவலுக்காகவும் அவசியமான நடவடிக்கைக்காகவும்**

*நிபந்தனைகள்*

(1) *ஏதேனும் அனுமதிப்பத்திரம் ஏற்றுமதிக்காக வழங்கப்படும்போது, காடுபேணுநர் தலைமையதிபதியினால் அல்லது வேறு எவரேனும் காட்டு அலுவலரினால் அல்லது எவரேனும் சுங்க அலுவலரினால் கோரப்பட்டதன் மீது சோதனைக்காகவும் புறக்குறிப்பிடுகைக்காகவும் அத்தகைய அனுமதிப்பத்திரத்தை காண்பிப்பது ஏற்றுமதிக்கான அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.*

(2) *இவ்வனுமதிப்பத்திரம் கைமாற்றத்தகாததாகும்.*

(3) *அனுமதிப்பத்திரம் தொடர்பான பொருட்களை காண்பிக்குமாறு மேலே (1) ஆம் நிபந்தனையில் குறிப்பிடப்பட்ட அலுவலரொருவரினால் கோரப்படுகின்றபோதான ஏதேனும் சந்தர்ப்பத்தில், அத்தகைய பொருட்களை சோதனைக்காக காண்பிப்பது அல்லது காண்பிக்கச் செய்விப்பது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.*

(4) *அனுமதிப்பத்திரத்தை வழங்கும் அலுவலர் ஏதேனும் சந்தர்ப்பத்தில் தகுதியானதெனக் கருதுகின்றவாறு அவரது கையொப்பம் மற்றும் பதவி முத்திரை மூலம் உரிய முறையில் மெய்யுறுதிப்படுத்தப்பட்ட ஏதேனும்/ எவையேனும் மேலதிக நிபந்தனை / நிபந்தனைகளை விதித்தால், அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவர் அவ்வாறு விதிக்கப்பட்ட அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.*

(5) *ஏற்றுமதிசெய்யப்பட்ட பொருட்கள் மரக்குற்றி அல்லது அரியப்பட்ட வெட்டுமரமாகவிருப்பின், அனுமதிப்பத்திரத்தில் குறித்துக்காட்டப்பட்ட அடையாளக்குறி அரியப்பட்ட வெட்டுமரம் அல்லது மரக்குற்றியின் மீதும் காணப்படுதல் வேண்டும்.*

***(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 24 (1)(ஞ) என்னும் பிரிவின்கீழ் இயற்றப்பட்ட மேலேயுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிகளுக்கு அமைந்தொழுகுவதற்கு உடன்படுகின்றேன்.***

……………………………………… ………………………………………….....

*திகதி* *அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கையொப்பம்*

EOG *08 - 0205/1*

*ச.வ.பீ. 203/33* (VIII)

## *(451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டம்*

*(451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச் சட்டத்தின் 23அ, 23ஆ, 23இ, 23ஈ மற்றும் 28(3) என்னும் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 64ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவினால் தனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*சட்டத்தரணி பவித்ரா வண்ணிஆரச்சி,*
*வனசீவராசிகள் மற்றும் வனவளப்*
*பாதுகாப்பு அமைச்சர்.*

பத்தரமுல்லை
*2023.08.11.*

### ஒழுங்குவிதிகள்

1. (1) இவ்வொழுங்குவிதிகள் 2023 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க காடு பேணல் (வெட்டுமரச் சாலைகளையும் ஆதனக் குறிகளையும் பதிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. கட்டளைச் சட்டத்தின் 23அ என்னும் பிரிவின் நியதிகளின்படி வெட்டுமரச் சாலைத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான பதிவுச் சான்றிதழ் ஒன்றுக்காக, கட்டளைச் சட்டத்தின் 23ஆ என்னும் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றும், பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் தரப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 26 ஆந் திகதிய 68/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காட்டு ஒழுங்குவிதியின்கீழ், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் பெறப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றின் பயனைக்கொண்டு வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற எவரேனுமாள், இவ்வொழுங்குவிதிகளின் கீழான பதிவுச் சான்றிதழ் ஒன்றைப் பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது என்பதுடன், அவ்வாறு பெறப்பட்ட பதிவுச் சான்றிதழ் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுகின்றதும், 2ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டதுமான வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குரிய ஒரு பதிவுச்சான்றிதழுக்கான விண்ணப்பமொன்று, அத்தகைய வெட்டுமரச்சாலை, அத்தகைய அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்டவாறு ஓர் அரச காட்டுக்கான அல்லது ஒரு வனப் பெருந்தோட்டத்துக்கான குறைந்தபட்ச வான்வழித் தூரத்தினுள் அமைந்திருப்பின், மறுக்கப்படுதல் வேண்டும்.

4. (1) ஒரு வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான பதிவுச்சான்றிதழொன்றை வழங்குவதன்மேல், காடு பேணுநர் தலைமையதிபதி, எவ்வாளுக்குப் பதிவுச்சான்றிதழ் வழங்கப்பட்டதோ அவ்வாளுக்கு வெட்டுமரச்சாலைத் தொழிலில் ஈடுபடுவதற்கு அதிகாரமளிக்கின்ற அனுமதிப்பத்திரமொன்றையும் வழங்குதல் வேண்டும். அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கான விண்ணப்பமானது, பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VIII இல் தரப்பட்டவாறான படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(2) பதிவுச் சான்றிதழும் அனுமதிப்பத்திரமும் முறையே இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணைகள் III மற்றும் IV இல் தரப்பட்டவாறான அத்தகைய படிவங்களில் இருத்தல் வேண்டும். முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலன்றி, பதிவுச் சான்றிதழானது வெட்டுமரச்சாலைத் தொழில் தொழிற்பாட்டில் இருக்க வேண்டிய காலம்வரை செல்லுபடியுடையதாதல் வேண்டுமென்பதுடன், அனுமதிப்பத்திரமானது சொல்லப்பட்ட அவ்வனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதிக்குச் செல்லுபடியாதலும் வேண்டும்.

5. (1) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை V இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட பதிவுக் கட்டணம், அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை V இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட வெட்டுமரச்சாலைத்தொழிலொன்றைக் கொண்டுநடாத்துவதற்குரிய அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான வருடாந்தக் கட்டணமானது, அவ்வட்டவணையின் நிரல் III இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருமுன்னர், 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 26 ஆந்தேதிய 68/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, காட்டு ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நடப்பாண்டுக்குச் செல்லுபடியாகவுள்ள அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுள்ள எவரேனுமாள் நடப்பாண்டுக்கான வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது.

6. வெட்டுமரச்சாலையின் சொந்தக்காரர், அத்தகைய வெட்டுமரச்சாலை தொடர்பில் வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் வெட்டுமரச்சாலையில் துலாம்பரமான ஓர் இடத்தில் வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

7. (1) வெட்டுமரச்சாலையொன்று பதிவு செய்யப்படுவதன்மேல், காடுபேணுநர் தலைமையதிபதி, அத்தகைய வெட்டுமரச் சாலைக்கு ஆதனக் குறியொன்றைக் குறித்தளித்தல் வேண்டும்.

(2) ஏதேனும் வெட்டுமரச்சாலை தொடர்பிலான வடிவம், அளவு மற்றும் தனித்தன்மையான எண்ணும் எழுத்தும் என்பன, குறிப்பிட்டவொரு வெட்டுமரச்சாலையைப் பதிவுசெய்யும் நேரத்தில், நிருவாக மாவட்டத்தையும் அதனையொத்த வேறு தேவைப்பாடுகளையும் கவனத்துட்கொண்டு, காடுபேணுநர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) காடுபேணுநர் தலைமையதிபதி, கொடுக்கப்பட்ட பரிமாணத்தைக்கொண்ட ஆதனக் குறியானது வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளதென அச்சொந்தக்காரருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சொந்தக்காரர், ஆதனக் குறியை உலோகத்தினால் தயாரித்துப் பதிக்கப்படுவதற்கு இயன்றதாகவுள்ளதெனத் தோன்றுகின்றவாறான அத்தகைய முறையில் அதனை ஒரு வெட்டுமரத்துண்டில் பொறித்தலும் வேண்டும்.

(4) வெட்டுமரச்சாலையின் சொந்தக்காரர், அதன் பின்னர், ஒவ்வொரு பக்கத்திலும் அவரது பெயர், திகதி மற்றும் கையொப்பம் என்பவற்றுடன் சேர்த்து, இருபதுக்கு இருபது சென்றி மீற்றருடைய (20cm) சதுரக் கடதாசித்தாளில் ஆதனக்குறியைப் பதித்தல் வேண்டும் என்பதுடன், அதனை அவர், அத்தகைய குறி அவருக்கு வழங்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள், அவரது வெட்டுமரச்சாலை எப்பிரதேசக் காட்டு அலுவலரின் இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அப்பிரதேசக் காட்டு அலுவலருக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

8. அத்தகைய வெட்டுமரச்சாலையிலிருந்து விற்பனை செய்யப்பட்ட வெட்டுமரமுட்பட ஒரு வெட்டுமரச்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட எல்லா மரக்குற்றிகளும் அரியப்பட்ட வெட்டுமரமும், அந்தந்த வெட்டுமரச்சாலைக்கு வழங்கப்பட்ட ஆதனக் குறியினால் இலச்சினையிடப்படுதல் வேண்டும்.

9. (1) வெட்டுமரச்சாலையின் சொந்தக்காரர், கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய நாளாந்தப் பதிவைக் கொண்டுள்ள பின்வரும் இடாப்புக்களைப் பேணுதல் வேண்டும்:-

(அ) வெட்டுமரக் குற்றிகள் தொடர்பாகப் பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VI இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலான இடாப்பொன்று; அத்துடன்

(ஆ) அரியப்பட்ட வெட்டுமரம் தொடர்பாகப் பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VII இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலான இடாப்பொன்று.

(2) ஒரு வெட்டுமரச்சாலையில் பேணப்பட்ட இடாப்புக்களில் தோன்றுகின்றவாறான வெட்டுமரக் கையிருப்பானது, வெட்டுமரச்சாலையிலுள்ள உருப்படியான வெட்டுமரக் கையிருப்பை எல்லா நேரங்களிலும் ஒத்திருத்தல் வேண்டும்.

(3)(அ) வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரர், அடுத்துப் பின்வரும் மாதத்தின் பத்தாவது நாளுக்கு முன்னர் ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் அந்த மாதத்துக்கான இடாப்பின் எல்லா விபரங்களையும் உள்ளடக்குகின்ற சான்றுப்படுத்தப்பட்ட பொழிப்பொன்றை, பொருளளவில் மரக்குற்றிகள் தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VI இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில், எவ்விடப்பரப்பில் வெட்டுமரச்சாலை அமைந்துள்ளதோ அவ்விடப்பரப்பின் பரப்பெல்லைக் காட்டு அலுவலருக்கு பதிவஞ்சல்மூலம் அனுப்புதல் வேண்டும்.

(ஆ) சீதாவக மற்றும் பாதுக்கை பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள வெட்டுமரச்சாலைகள் தவிர்ந்த கொழும்பு நிருவாக மாவட்டத்தில் அமைந்துள்ள வெட்டுமரச்சாலைகளின் விடயத்தில், சான்றுப்படுத்தப்பட்ட பொழிப்புக்கள் வடமேல் - மேற்கு பிராந்தியத்துக்குப் பொறுப்பாகவுள்ள பிரதி காடு பேணுநருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

10. (1) வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றைப் புதுப்பிப்பதற்கான

விண்ணப்பமொன்று, பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை VIII இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன், அது நடப்பு அனுமதிப்பத்திரம் முடிவுறுவதற்கு ஆகக்குறைந்தது ஒரு மாதத்துக்கு முன்னரேனும் காடு பேணுநர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்ட வருடாந்தக் கட்டணம், ஒரு வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றைப் புதுப்பிப்பதற்காகச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) சொந்தக்காரர் (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தவறுவாராயின், அனுமதிப்பத்திரம் முடிவுற்றதன் பின்னர் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிப்பதற்கு அவர் அவ்வாறு தாமதித்த ஒவ்வொரு மாதத்துக்கும் அல்லது அதன் பாகத்துக்கும் மிகைக்கட்டணமாக, விதித்துரைக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் பத்து சதவீதத்தைக் காடுபேணுநர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும். செல்லுபடியான காரணமின்றி ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிக்கத் தவறுதலானது பதிவுச் சான்றிதழின் இல்லாதாக்குகையை விளைவித்தல் வேண்டும்.

11. (1) வெட்டுமரச்சாலையின் எந்த பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் பதிவும் அனுமதிப்பத்திரமும் இடைநிறுத்தப்பட்டுள்ளனவோ அந்த பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், அத்தகைய இடைநிறுத்தல் காலப்பகுதி முடிவுற்றபின்னர் வெட்டுமரச்சாலைத் தொழிலைத் தொடங்க உட்கருதுகின்றவிடத்து, இடைநிறுத்தல் காலப்பகுதி முடிவுறும் திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர், அவர் புதிய பதிவுச்சான்றிதழுக்காகவும் அனுமதிப்பத்திரத்துக்காகவும் விண்ணப்பித்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அவர் அவ்வாறு செய்யத் தாமதிப்பின், பதிவுச் சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம் எதுவும் வழங்கப்படுதலாகாது.

(2) ஓராம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறு தாமதமொன்று இருந்துள்ளவிடத்து, காடு பேணுநர் தலைமையதிபதி, பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் வழங்க மறுக்கின்றமை பற்றி பதிவஞ்சல்மூலம் சொந்தக்காரருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(3) அறிவித்தலைப் பெற்றதன்மேல் வெட்டுமரச்சாலையின் சொந்தக்காரர், அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்ட திகதியிலிருந்து முப்பது நாட்களினுள் காடு பேணுநர் தலைமையதிபதிக்குப் பதிவஞ்சல் மூலம் மேன்முறையீடு செய்யலாம்.

(4) ஓராம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியினுள் வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரரினால் போதியளவிலானதும் நியாயப்படுத்தக்கூடியதுமான காரணங்கள் கொடுக்கப்பட்டிராதிருப்பின், காடு பேணுநர் தலைமையதிபதி, வெட்டுமரச்சாலையின் பதிவுச் சான்றிதழினதும் அனுமதிப்பத்திரத்தினதும் வழங்குகைளை மறுப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அதுபற்றி வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரருக்குப் பதிவஞ்சல் மூலம் அறிவித்தலும் வேண்டும்.

12. (1) கட்டளைச் சட்டத்தின் 23 இ என்னும் பிரிவின் நியதிகளின்படி எந்த வெட்டுமரச்சாலையின் பதிவு இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அந்த வெட்டுமரச்சாலையின் சொந்தக்காரர், காடு பேணுநர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன், அத்தகைய இல்லாதாக்குகைத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் அவரது முழு வியாபாரக் கையிருப்பையும் வேறேதேனும் பதிவு செய்யப்பட்ட வெட்டுமரச்சாலையின் சொந்தக்காரருக்கு அல்லது காடு பேணுநர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளுக்கு விற்பனை செய்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். காடு பேணுநர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், அத்தகைய ஏதேனும் வெட்டுமரக் கையிருப்பை இடம்பெயர்ப்பதற்கான அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் வேண்டும்.

(2) கட்டளைச் சட்டத்தின் 23 இ என்னும் பிரிவின் நியதிகளின்படி ஒரு வெட்டுமரச்சாலையின் பதிவு இல்லாதாக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய இல்லாதாக்குகைத் திகதியிலிருந்து ஆறு ஆண்டுகளைக்கொண்ட காலப்பகுதியொன்று முடிவடையும் வரை, இல்லாதாக்கப்பட்ட வெட்டுமரச்சாலை எக்காணியில் அமைந்திருந்ததோ அக்காணியில் புதிய வெட்டுமரச்சாலையொன்று பதிவுசெய்யப்படுதலாகாது.

13. (1) (அ) பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் மற்றும் எதிர்காலத்தில் சொந்தக்காரராக வரவிருப்பவர் ஆகிய இருவரும் காடு பேணுநர் தலைமையதிபதிக்கு அல்லது அதற்கென காடுபேணுநர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு கோரிக்கையொன்றைச் செய்வதன்மேல் மாத்திரமே, வெட்டுமரச்சாலை தொடர்பில் காடு பேணுநர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட பதிவுச்சான்றிதழ் வேறு ஆளுக்குக் கைமாற்றப்படற்பாலதாதல் வேண்டும்.

(ஆ) ஓராம் பந்தியின் நியதிகளின்படி பதிவின் கைமாற்றத்திற்கான ஒவ்வொரு கோரிக்கையும் பொருளளவில் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் சொந்தக்காரராக வரவிருப்பவரின் விண்ணப்பத்துடனும், புதிய

சொந்தக்காரர் இடாப்பிலுள்ள பதிவுகளுடன் வெட்டுமரச்சாலைகளிலுள்ள மரக்குற்றிகள் மற்றும் அரியப்பட்ட வெட்டுமரக் கையிருப்புக்களைத் தானே சரிபார்த்துள்ளாரென்ற கூற்றுடனும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(இ) இடாப்பிலுள்ள எண்கள் வெட்டுமரச்சாலையிலுள்ள கையிருப்புடன் ஒத்ததாகவிராத விடயத்தில், இயைபான கோரிக்கையுடன் சேர்த்து மரக்குற்றிகள் மற்றும் அரியப்பட்ட வெட்டுமரத்தின் ஒவ்வாமைகளுக்கான காரணங்களை எடுத்துக்காட்டுகின்ற கூற்றொன்றை காடுபேணுநர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) (அ) காடு பேணுநர் தலைமையதிபதி அல்லது அதற்கென காடு பேணுநர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், வெட்டுமரச்சாலையின் பதிவு சொந்தக்காரராக வரவிருப்பவரின் பெயருக்குக் கைமாற்றப்படுவதனை அங்கீகரிக்கின்றவிடத்து, முந்தைய சான்றிதழ் உடனடியாக இல்லாதாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கமைய, அவ்வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அவரை இயலச்செய்விக்கின்ற பதிவுச் சான்றிதழொன்றும் அனுமதிப்பத்திரமொன்றும் புதிய சொந்தக்காரருக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

(ஆ) சொந்தக்காரராக வரவிருப்பவர், அத்தகைய பதிவுச் சான்றிதழ் மற்றும் அனுமதிப்பத்திரம் தொடர்பில் இதற்கான அட்டவணை V இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

14. (1) குறித்துரைக்கப்பட்டவொரு காலத்துக்குத் தனது வெட்டுமரச்சாலையை மூடுவதற்கு உட்கருதுகின்ற வெட்டுமரச்சாலையொன்றின் சொந்தக்காரர், ஆகக்குறைந்தது அவ்வாறு மூடுவதற்கு உட்கருதப்பட்ட திகதிக்கு முன்னரான முப்பது நாட்களைக்கொண்ட காலப்பகுதிக்குள் தனது உட்கருத்தை எழுத்துமூலம் காடு பேணுநர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும். காடு பேணுநர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை IX இல் தரப்பட்டுள்ள படிவத்தில் வெட்டுமரச்சாலையின் மூடுகை பற்றிய அறிவித்தலை வழங்குதல் வேண்டும்; அது, வழங்கப்பட்ட திகதியிலிருந்து அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் நியதிகளின்படி தனது வெட்டுமரச்சாலையை மூடியுள்ள வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரர் ஒருவர், மீண்டுமொருமுறை வெட்டுமரச்சாலைத் தொழிலைத் தொடங்குவதற்கு விரும்புகின்றவிடத்து, அவர் அத்தகைய நோக்கத்துக்காக அவருக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் புதுப்பித்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அக்குறிப்பிட்ட வெட்டுமரச்சாலையின் பதிவு, அது மூடப்பட்டதிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதிக்குப் பின்னர் புதுப்பிக்கப்படுதலாகாது என்பதுடன், சொந்தக்காரர் தனது வெட்டுமரச்சாலையை மீளத்திறப்பதற்கு விரும்பினால் இதன் 3ஆம் மற்றும் 4ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க அவர் செயலாற்றுதலும் வேண்டும் என்பதுடன், புதிய விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன்மூலம் புதிய பதிவுச் சான்றிதழொன்றை அவர் பெறுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரர், வெட்டுமரச்சாலையின் உட்கருதப்பட்ட மூடுகை பற்றி அறிவித்து அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியொன்றுடன் சேர்த்து, அவ்வெட்டுமரச்சாலையை மீளத்திறக்கும் திகதிக்கு ஆகக்குறைந்தது முப்பது நாட்களுக்கு முன்னரேனும் காடு பேணுநர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும். முறையான நுண்ணாய்வொன்றை நிறைவேற்றிய பின்னர் காடுபேணுநர் தலைமையதிபதி, கோரிக்கை பெறப்பட்ட திகதியிலிருந்து வெட்டுமரச்சாலைத் தொழிலைத் தொடங்குவதற்கென இயைபான பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் வழங்கலாம்.

(4) மூன்றாம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக புதிய பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் வழங்குவதன்மீது வெட்டுமரச்சாலை மூடப்பட்ட காலப்பகுதிக்கான நிலுவைகள், பதிவுக் கட்டணங்கள் அல்லது ஏதேனும் மிகைக்கட்டணம் அறவிடப்படுதலாகாது.

15. காட்டு அலுவலரொருவர் அல்லது கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு வெட்டுமரச்சாலைகளைச் சோதனையிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர், ஏதேனும் வெட்டுமரச்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்ட மரக்குற்றிகளையும் அரியப்பட்ட வெட்டுமரத்தையும் அத்தகைய வெட்டுமரச்சாலையின் கொடுக்கல்வாங்கல் பற்றிய பதிவேடுகளையும் சோதனையிடும் நோக்கத்துக்காக ஏதேனும் நியாயமான நேரத்தில் அதனுள் பிரவேசிக்கலாம். வெட்டுமரச்சாலை சோதனையிடப்படுவதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்காக வெட்டுமரச்சாலையின் சொந்தக்காரரினால் பேணப்பட்ட எல்லா வெட்டுமரங்கள், இடாப்புக்கள் மற்றும் பதிவேடுகளையும் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்குக் கிடைக்கக்கூடியனவாக்குதலும், அவரிடமிருந்து தேவைப்படுத்தப்படக்கூடியவாறான எல்லா உதவிகளையும் அவருக்கு அளித்தலும் வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரரின் கடமையாதல் வேண்டும்.

16. வெட்டுமரச்சாலைகளைச் சோதனையிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் ஏதேனும் வெட்டுமரச்சாலை தொடர்பிலான சோதனையொன்று நிறைவேற்றப்படுகின்றவிடத்து, களஞ்சியப்படுத்தப்பட்ட எல்லா வெட்டுமரங்களும் சட்டமுறையாக தனது உடமையிலும் கட்டுப்பாட்டிலும் இருந்ததென எண்பித்தல் அதன் சொந்தக்காரரின் கடமையாதல் வேண்டும்.

17. ஒழுங்குவிதிகள் 3, 6, 7, 8, 9, 12, 13, 15 மற்றும் 16 என்பவற்றின் ஏற்பாடுகளைத் தவிர, இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுடன் சேர்த்து மேலதிகமாகப் பின்வரும் ஏற்பாடுகள் நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையொன்றுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை ஒவ்வொன்றும், கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கும் இணங்க, அத்தகைய நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை எந்தத் தனியார் காணியின்மேல் அமைந்துள்ளதோ அந்தத் தனியார் காணியினுள், வெட்டி வீழ்த்தப்பட்ட வெட்டுமரத்தை அரியும் நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையைப் பயன்படுத்தி வெட்டுமரத்தை அரிவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், அரிதற் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு முன்னர், நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை எவ்விடப்பரப்பினுள் தொழிற்படுகின்றதோ அவ்விடப்பரப்பின் பரப்பெல்லைக் காட்டு அலுவலரிடமிருந்து அல்லது பிரதேச செயலாளரிடமிருந்து வெட்டுமரம் ஒரு தனியார் காணியிலிருந்து பெறப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழொன்றைப் பெறுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், (452 ஆம் அத்தியாயமான) மரங்களை வெட்டி வீழ்த்துதல் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின்கீழ் மரங்களை வெட்டி வீழ்த்துவதற்குப் பயன்படுத்தப்படும் வெட்டிவீழ்த்துதல் அனுமதிப்பத்திரமொன்றை வைத்திருக்கும் எவரேனுமாள், இவ்வொழுங்குவிதியின்கீழான சான்றிதழொன்றைப் பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதலாகாது;

(இ) பந்தி (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழ், பொருளளவில் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை X இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்;

(ஈ) அரிதல் நிறைவேற்றப்படும்போது, தொழிற்படுத்துநரானவர் அரிவு ஆலைக்கு வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழையும் அனுமதிப்பத்திரத்தையும் மற்றும் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழையும் தனதுடைமையில் வைத்திருத்தல் வேண்டும்;

(உ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை எந்த கையுழவுயந்திரத்திற்கு அல்லது இழுவையிணைப்பு வண்டிக்குப் பொருத்தப்பட்டுள்ளதோ அந்தக் கையுழவுயந்திரம் அல்லது இழுவையிணைப்பு வண்டி மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியிடம் பதிவு செய்யப்பட்டித்தல் வேண்டுமென்பதுடன், நடப்பாண்டு தொடர்பான வாகன அரசிறை உரிமமொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும். அரிதல் நிறைவேற்றப்படும்போது சொல்லப்பட்ட உரிமம் எல்லா நேரங்களிலும் பொறித்தொகுதி இயக்குநரின் உடைமையில் இருத்தல் வேண்டும்;

(ஊ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் பதிவானது, விண்ணப்பகாரர் நிரந்தரமாக வதிகின்ற பிரதேச செயலாளர் பிரிவினுள் மட்டுமே நிறைவேற்றப்படுதல் வேண்டும்;

(எ) விண்ணப்பகாரர், நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை எந்தக் கையுழவுயந்திரத்துக்குப் பொருத்தப்பட்டுள்ளதோ அந்தக் கையுழவுயந்திரத்தின் பதிவுபெற்ற சொந்தக்காரராக இருத்தல் வேண்டும்;

(ஏ) ஓர் அரச காட்டிலிருந்து அல்லது வனப் பெருந்தோட்டத்திலிருந்து அரிதல் நிறைவேற்றப்படும் காணிக்கான குறைந்தபட்ச வான்வழித் தூரம் 200 மீற்றர்களுக்குக் குறைவாக இருத்தலாகாது;

(ஐ) அனுமதிப்பத்திரத்தின் புதுப்பித்தலுக்காக விண்ணப்பிக்கும்போது, கையுழவுயந்திரத்தின் வருடாந்த வாகன அரசிறை உரிமம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்;

(ஒ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையொன்று, பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட கையுழவுயந்திரம் அல்லது இழுவையிணைப்பு வண்டி தவிர்ந்த வேறு ஏதேனும் வாகனத்துக்கு அல்லது பொறித்தொகுதிக்குப் பொருத்தப்படுதலாகாது;

(ஓ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலைக்குப் பயன்படுத்தப்படும் ஈர்வாளின் வெட்டுவாய்ப்பகுதி, விட்டத்தில் 75 சென்றி மீற்றர்களுக்கு (30 அங்குலங்கள்) குறைவாகவிருத்தல் வேண்டும்;

(ஔ) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையொன்று ஒவ்வொரு நாளிலும் மு.ப. 06.00 மணியிலிருந்து பி.ப. 06.00 மணிவரை மட்டுமே தொழிற்படுத்தப்படுதல் வேண்டும்;

(க) கட்டளைச்சட்டத்தின் ஏற்பாட்டின் பயனைக்கொண்டு வெட்டுமரச்சாலைகளைச் சோதனையிட அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் ஏதேனும் நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை தொழிற்படுத்தப்படும்போது எந்நேரத்திலும் அந்த அரிவு ஆலையைச் சோதனையிடலாம் என்பதுடன், அதற்காகத் தேவைப்படுத்தப்பட்ட எல்லா உதவிகளையும் வழங்குவது நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் சொந்தக்காரரினதும் அவ்வெட்டுமர அரிவு ஆலை எந்தக் காணியில் தொழிற்படுத்தப்படுகின்றதோ அந்தக் காணியின் சொந்தக்காரரினதும் கடமையாதலும் வேண்டும்.

18. இவ்வொழுங்குவிதிகளில் -

"பதிவுசான்றிதழ்" என்பது ஒரு வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்த கட்டளைச்சட்டத்தின் 23அ என்னும் பிரிவின்கீழ் பெறப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒரு பதிவுச் சான்றிதழ் என்று பொருளாகும்;

"காடு பேணுநர் தலைமையதிபதி" என்பது கட்டளைச்சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட காடு பேணுநர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை" என்பது நிலத்தில் நிரந்தரமாகப் பொருத்தப்படாது கையுழவுயந்திரத்தின்மீது ஏற்றப்பட்டதும் மற்றும் வெட்டுமரத்தை அரிவதற்காகப் பயன்படுத்தப்படுவதுமான ஓர் அரிவு ஆலை என்று பொருளாகும்;

"கட்டளைச்சட்டம்" என்பது (451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டம் என்று பொருளாகும்;

"வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரர்" என்பது வெட்டுமரச்சாலையை நிருவகிக்கும் முகவரொருவரை அல்லது எவரேனும் ஊழியரையும் உள்ளடக்கும்;

"அனுமதிப்பத்திரம்" என்பது ஒரு வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்த கட்டளைச்சட்டத்தின் 23அ என்னும் பிரிவின்கீழ் பெறப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஓர் அனுமதிப்பத்திரம் என்று பொருளாகும்;

"வெட்டுமரச்சாலை" என்பது, கட்டளைச்சட்டத்தின்கீழ் அச்சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

19. 1986 நவெம்பர் 26 ஆந்திகதிய 429/8ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிமூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானவையும் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையுமான 1979 திசெம்பர் 26 ஆந்திகதிய 68/14ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க காட்டு ஒழுங்குவிதிகளும் மற்றும் 28ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டு 1980 மார்ச்சு 20 ஆந்திகதிய 80/7ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலும், அவற்றின்கீழ்ச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

## அட்டவணை I

(ஒழுங்குவிதிகள் 2 மற்றும் 13)

### (451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டம்
### வெட்டுமரச்சாலை ஒன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் (பிரிவு 23ஆ)
### காட்டுத் திணைக்களம்

1. விண்ணப்பகாரரின் முழுப் பெயர்: ..........................................................................................

நிரந்தர முகவரி: ..........................................................................................................

தேசிய அடையாள அட்டை இல. : ..........................................................................................

(விண்ணப்பகாரர் ஒரு கம்பெனியாகவிருப்பின் பதிவுச்சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்.)

2. வெட்டுமரச்சாலை அமைந்துள்ள அல்லது அமையவுள்ள இடத்தின் முகவரி: ……………………………………………..

……………………………………………………………………………………………………………………..

காணியின் பெயர்:…………………………………………………………………………………………………..

காணியின் சொந்தக்காரர்:……………………………………………………………………………………………

(உரிமையாண்மைக்கான ஆவண எண்பிப்பைச் சமர்ப்பிக்கவும்)

3. வெட்டுமரச்சாலையின் பெயர் : ………………………………………………………………………………

4. வெட்டுமரச்சாலையின் தன்மை: ……………………………………………………………………………

வெட்டுமரச்சாலைத் தொழிலின் தன்மையின் வகுதியைச் சுட்டிக்காட்டி இயைபான கூட்டிற்குள் (✓) அடையாளம் இடவும்.

(அ) அரிவு ஆலை

(i) அரிவு ஆலை (அரிவதற்காக மட்டும்) ☐

(ii) நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை (அரிவதற்காக மட்டும்) ☐

(ஆ) வெட்டுமர விற்பனை நிலையம் ☐

(வெட்டுமரங்களின் விற்பனைக்காக மட்டும் என்பதுடன் பொறிகளைப் பயன்படுத்த முடியாது)

(இ) வெட்டுமரத்தைப் பக்குவப்படுத்தும் அல்லது பதனிடும் தொழிற்சாலை ☐

(மரக்குற்றிகளை அரிதல் வெட்டுமரத்தை விற்பனைசெய்தல் என்பன அனுமதிக்கப்படமாட்டாது)

(ஈ) தச்சு வேலைக் கொட்டில் ☐

(மரக்குற்றிகளைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் வெட்டுமரத்தை விற்பனை செய்தல் என்பன அனுமதிக்கப்படமாட்டாது)

(உ) வெட்டுமரத் தளபாடக் கடை ☐

(செய்து முடித்த தளபாடங்களின் விற்பனை மட்டும். பொறித்தொகுதிகளைப் பயன்படுத்தல் அனுமதிக்கப்படமாட்டாது)

(ஊ) விறகுக் கொட்டில் ☐

5. வெட்டுமரச்சாலையின் அமைவிடம் பற்றிய விவரணம்:

i. மாவட்டம்:……………………………………… ii. பிரதேச செயலாளர் பிரிவு:…………………………………

iii. கிராம அலுவலர் பிரிவு:…………………………… iv. உள்ளூராட்சிப் பிரதேசம்:………………………..……….

6. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் விடயத்தில்;

i. கையுழவுயந்திரத்தின் பதிவிலக்கம்:..........................................................................................

ii. இழுவையிணைப்பு வண்டியின் பதிவிலக்கம்:..........................................................................
(பதிவுச்சான்றிதழ்கள் மற்றும் அரசிறை உரிமத்தின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

7. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையைப் பயன்படுத்தவுள்ள பிரதேச செயலாளர் பிரிவு: ..................................
.........................................................................................................................................

8. தொழில் ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள திகதி:.......................................................................

9. சூழல் பாதுகாப்பு உரிமத்தின் செல்லுபடிக் காலப்பகுதி:..........................................................................
(ஒரு பிரதியை இணைக்கவும்)

இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையும் என்று இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். (451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டத்திற்கும், காடு பேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இத்தால் உடன்படுகின்றேன்.

.........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: ...........................

பி.கு. இவ்விண்ணப்பம் மூன்று பிரதிகளில் உரிய பிரதேசத்தின் பிரதேச காட்டு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சீதாவக மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர் இடப்பரப்புக்கள் தவிர்ந்த கொழும்பு மாவட்டத்தின் விண்ணப்பங்கள் பிராந்திய பிரதி காடு பேணுநர், இல.60, அக்குரகொட வீதி, பெலவத்த, தலங்கம தெற்கு என்னும் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சீதாவக மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர் இடப்பரப்புக்களின் விண்ணப்பங்கள் களுத்துறையிலுள்ள பிரதேச காட்டு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 3)

| நிரல் I | நிரல் II | | |
|---|---|---|---|
| வெட்டுமரச்சாலையின் தன்மை | அரசுக்குரிய காட்டிலிருந்து வெட்டுமரச்சாலைக்கான குறைந்தபட்ச வான்வழித் தூரம் 40 ha இற்குக் குறையாமலும்/ வனப் பெருந்தோட்டத்திலிருந்து 20 ha இற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும். | | |
| | மாநகர சபை எல்லைகளினுள் (கி. மீற்றர்களில்) | நகர சபை எல்லைகளினுள் (கி. மீற்றர்களில்) | பிரதேச சபை எல்லைகளினுள் (கி. மீற்றர்களில்) |
| 1. அரிவு ஆலைகள் | 1 | 1 | 2 |
| 2. வெட்டுமர விற்பனை நிலையங்கள் | 0.5 | 0.5 | 1 |
| 3. வெட்டுமரத்தைப் பக்குவப்படுத்தும் அல்லது பதனிடும் தொழிற்சாலை | 0.5 | 0.5 | 1 |

| *நிரல் I* | *நிரல் II* | | |
|---|---|---|---|
| *4. தச்சுவேலைக் கொட்டில்கள்* | *0.5* | *0.5* | *1* |
| *5. வெட்டுமரத் தளபாடக் கடைகள்* | *தூர எல்லை ஏற்புடையதல்ல* | | |
| *6. விறகுக் கொட்டில்கள்* | *0.5* | *0.5* | *1* |

## அட்டவணை III

*(ஒழுங்குவிதிகள் 4)*

### (451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டம்
### வெட்டுமரச்சாலைக்கான பதிவுச் சான்றிதழ் (பிரிவு 23ஆ)
### காட்டுத் திணைக்களம்

*மாவட்டம்:* .......................... *பதிவிலக்கம்:* ...........................

*1.* *வெட்டுமரச்சாலையின் பெயர்:* ..........................................................................................

*2.* *வெட்டுமரச்சாலையின் முகவரி:* ..........................................................................................

*3.* *வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரர் பற்றிய விபரங்கள்*

i. *முழுப்பெயர்:* ..........................................................................................

ii. *நிரந்தர முகவரி:* ..........................................................................................

iii. *தேசிய அடையாள அட்டை இல.:* ..........................................................................................

*4.* *வெட்டுமரச்சாலையின் தன்மை:* ..........................................................................................

*5.* *நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் விடயத்தில்:*

i. *கையுழவுயந்திரத்தின் பதிவிலக்கம்:* ..........................................................................................

ii. *இழுவையிணைப்பு வண்டியின் பதிவிலக்கம்:* ..........................................................................................

iii. *நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை தொழிற்படுத்தப்படும் பிரதேச செயலாளர் பிரிவு:* .............................

*6.* *வெட்டுமரச்சாலைக்கு குறித்தளிக்கப்பட்ட ஆதனக் குறியீடு:* ..........................................................................................

................................................
*காடு பேணுநர் தலைமையதிபதி/*
*பிரதி காடு பேணுநர்/பிரதேச காட்டு அலுவலர்*

*திகதி:* ................................................
......................................................................... *காட்டு அலுவலகம்,*
.........................................................................

*வெட்டுமரச்சாலையின் அல்லது வேறு ஏதேனும் கருமத்தின் தன்மை மாற்றப்படவேண்டிய தேவையுள்ளபோது, பதிவுச் சான்றிதழை வழங்கிய அலுவலருக்கு தாமதம் எதுவுமின்றி கோரிக்கை செய்யப்படுதல் வேண்டும்.*

## அட்டவணை IV

(ஒழுங்குவிதி 4)

### (451 ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டம்
### வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் (பிரிவு 23ஆ)

மாவட்டம்: .......................... பதிவிலக்கம்: .......................

(451 ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டத்தின் 23ஆ என்னும் பிரிவின்கீழ் காட்டுத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதும் மேலேயுள்ள பதிவிலக்கத்தைக்கொண்டதுமான வெட்டுமரச்சாலை, காடு பேணல் கட்டளைச்சட்டத்தின் கட்டளைகளுக்கமைய அவ்வெட்டுமரச்சாலையின் பதிவு முன்னரே இல்லாதாக்கப்பட்டாலொழிய, ........................ இருந்து ........................ வரை கீழே குறிப்பிடப்பட்டவாறான வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இத்தால் அனுமதிக்கப்படுகின்றது.

1. வெட்டுமரச்சாலையின் பெயர்: ..........................................................................................

2. வெட்டுமரச்சாலையின் முகவரி: ..........................................................................................

3. வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரர் பற்றிய விபரங்கள்:

   i. முழுப்பெயர்:..........................................................................................

   ii நிரந்தர முகவரி:..........................................................................................

   iii தேசிய அடையாள அட்டை இல. :..........................................................................................

4. வெட்டுமரச்சாலையின் தன்மை:..........................................................................................

5. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் விடயத்தில்;

   i. கையுழவுயந்திரத்தின் பதிவிலக்கம்:..........................................................................................

   ii. இழுவையிணைப்பு வண்டியின் பதிவிலக்கம்: ..........................................................................................

   iii. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை தொழிற்படுத்தப்படும் பிரதேச செயலாளர் பிரிவு: ........................................

6. வெட்டுமரச்சாலைக்கு குறித்தளிக்கப்பட்ட ஆதனக் குறி: ..........................................................................................

..........................................................................
காடு பேணுநர் தலைமையதிபதி/அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்

திகதி: ............................
........................................................... காட்டு அலுவலகம்,
.............................................

நிபந்தனைகள்:

- வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரர் அல்லது அவரது முகவர், (451 ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாட்டுக்கு முரணாகச் செயலாற்றுதலாகாது.

- வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரர் அல்லது அவரது முகவர், அப்போதைக்கு வலுவிலுள்ள வெட்டுமரச்சாலை தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுதலாகாது.
- அரசின் ஆதனமாகவுள்ள வெட்டுமரமெதுவும் வெட்டுமரச்சாலை அமைந்துள்ள காணியில் களஞ்சியப்படுத்தப்படுதலாகாது.
- வெட்டுமரச்சாலை அமைந்துள்ள காணியின் உரிமையாண்மை வெற்றுமரச்சாலைச் சொந்தக்காரரிடமிருந்து மாறுகின்றவிடத்து, பதிவுச் சான்றிதழை புதிய காணிச் சொந்தக்காரருக்கு மாற்றுவதற்காக அல்லது பதிவுச் சான்றிதழை இல்லாதாக்குவதற்காக அப்பதிவுச் சான்றிதழானது அதனை வழங்கிய அலுவலருக்கு உடனடியாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை V

(ஒழுங்குவிதிகள் 5, 10 மற்றும் 13)

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *வெட்டுமரச்சாலையின் தன்மை* | *பதிவுக் கட்டணம்*<br><br>*ரூபா* | *அனுமதிப்பத்திரத்துக்கும் அதன் புதுப்பித்தலுக்குமான வருடாந்தக் கட்டணம்*<br><br>*ரூபா* |
| 1. அரிவு ஆலை | 5750.00 | 5750.00 |
| 2. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை | 5750.00 | 5750.00 |
| 3. வெட்டுமர விற்பனை நிலையம் | 3450.00 | 3450.00 |
| 4. வெட்டுமரம் பக்குவப்படுத்துதல் மற்றும் பதனிடுதல் தொழிற்சாலை | 5750.00 | 5750.00 |
| 5. தச்சுவேலை தொழிற்பட்டறை | 870.00 | 870.00 |
| 6. மரத்தளபாடக் கடை | 580.00 | 580.00 |
| 7. விறகுக் கொட்டில் | 170.00 | 170.00 |

## அட்டவணை VI

(ஒழுங்குவிதி 9)

| திகதி | தொடக்கக் கையிருப்பு (மரக்குற்றிகள்) | | | பெறப்பட்ட மரக்குற்றியின் அளவு | | | மரம் பெற்றுக் கொண்ட விதம் (அனுமதிப்பத்திர இல., வழங்கப்பட்ட திகதி, வழங்கிய அலுவலரின் பதவி) | விற்பனை செய்யப்பட்ட மரக்குற்றிகளின் அளவு | | | இறுதிக் கையிருப்பு (மரக்குற்றிகள்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இனம் | அளவு **dm³ / ft³** | மரக் குற்றிகளின் எண்ணிக்கை | இனம் | அளவு **dm³ / ft³** | மரக் குற்றி களின் எண் ணிக்கை | | இனம் | அளவு **dm³ / ft³** | மரக் குற்றி களின் எண் ணிக்கை | இனம் | அளவு **dm³ / ft³** | மரக் குற்றி களின் எண் ணிக்கை |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | |

## அட்டவணை VII

(ஒழுங்குவிதி 9)

| திகதி | தொடக்கக் கையிருப்பு | | பெறப்பட்ட அரியப்பட்ட வெட்டுமரம் | | | | | விற்பனை செய்த அரியப்பட்ட மரம் | | மீதிக் கையிருப்பு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | வெளியிலிருந்து | | அரியப்பட்ட மரம் பெற்றப்பட்ட விதம் | அரிதல் மூலம் மாற்றுதல் | | | | | |
| | இனம் | அளவு **dm³ / ft³** | இனம் | அளவு **dm³ / ft³** | | இனம் | அளவு **dm³ / ft³** | இனம் | அளவு **dm³ / ft³** | இனம் | அளவு **dm³ / ft³** |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | |

## அட்டவணை VIII

*(ஒழுங்குவிதி 4 மற்றும் 10)*

*(451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டம்*

**வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குரிய அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்**
***(பிரிவு 23 ஆ)***

காட்டுத் திணைக்களம்

1. வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரரின் முழுப்பெயர்: ……………………………………………………………

நிரந்தர முகவரி:……………………………………………………………………………………

தேசிய அடையாள அட்டை இல.: ………………………………………………………………………
(விண்ணப்பகாரர் ஒரு கம்பெனியெனில், பதிவுச் சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்)

2. வெட்டுமரச்சாலையின் முகவரி:……………………………………………………………………

3. வெட்டுமரச்சாலையின் பெயர்: ……………………………………………………………………

4. (அ) வெட்டுமரச்சாலையின் பதிவிலக்கம்: …………………………………………………………

(ஆ) முதலாவதாகப் பதிவுசெய்யப்பட்ட திகதி: ……………………………………………………

5. வெட்டுமரச்சாலையின் தன்மை: ……………………………………………………………………

6. கடைசியாகப் பெற்ற அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலப்பகுதி: …………………………………
(கடைசியாகப் பெற்ற அனுமதிப்பத்திரத்தின் பிரதியொன்றை இணைக்கவும்)

7. புதிய அனுமதிப்பத்திரம் கோரப்படும் காலப்பகுதி: ………………………………………………………

8. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையின் விடயத்தில்:

   i. கையுழவுயந்திரத்தின் பதிவிலக்கம்: ……………………………………………………………

   ii. இழுவையிணைப்பு வண்டியின் பதிவிலக்கம்: ……………………………………………………

   iii. அரசிறை உரிமத்தின் செல்லுபடிக் காலம்: ……………………………………………………
   (அரசிறை உரிமத்தின் பிரதியொன்றை இணைக்கவும்)

9. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலை தொழிற்படுத்தப்படவுள்ள பிரதேச செயலாளர் பிரிவு: ……………………

10. வெட்டுமரச்சாலை தொடர்பாகவுள்ள காடு பற்றிய தவறுகள் எவையேனுமிருப்பின் அவை பற்றிய விபரங்கள்: ……………
……………………………………………………………………………………………………

11. சூழல் பாதுகாப்பு உரிமத்தின் செல்லுபடிக் காலம்: ……………………………………………………
(பிரதியொன்றை இணைக்கவும்)

இவ்விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கெட்டியவரை உண்மையானவையும் செம்மையானவையும் என்று இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். (451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டத்திற்கும், காடு பேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க வெட்டுமரச்சாலைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு இத்தால் உடன்படுகின்றேன்.

……………………………………
வெட்டுமரச்சாலைச் சொந்தக்காரரின் கையொப்பம்

திகதி: ………………………

பி.கு. இவ்விண்ணப்பம் இரு பிரதிகளில் உரிய பிரதேசத்தின் பிரதேச காட்டு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சீதாவக மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர் இடப்பரப்புக்கள் தவிர்ந்த கொழும்பு மாவட்டத்தின் விண்ணப்பங்கள் பிராந்திய பிரதி காடு பேணுநர், இல.60, அக்குரகொட வீதி, பெலவத்த, தலங்கம தெற்கு என்னும் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஹங்வெல மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர் இடப்பரப்புக்களின் விண்ணப்பங்கள் களுத்துறையிலுள்ள பிரதேச காட்டு அலுவலருக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை IX

(ஒழுங்குவிதி 16)

### (451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டம்

வெட்டுமரச்சாலையை மூடுவதற்கான அறிவித்தல்

1. வெட்டுமரச்சாலை உரிமையாளரின் முழுப் பெயர்:

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
………………………………………………………………………………………

நிரந்தர முகவரி:

……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
………………………………………………………………………………………

2. வெட்டுமரச்சாலையின் பெயரும் முகவரியும்: ……………………………………………………
……………………………………………………………………………………………………
………………………………………………………..

3. பதிவிலக்கம்: ………………………………………………………………………………………

4. வெட்டுமரச்சாலையின் தன்மை: ……………………………………………………………………

அ. ……………………………………………………………………………………………
ஆ. ……………………………………………………………………………………………..
இ. ……………………………………………………………………………………………..
ஈ. ……………………………………………………………………………………………..
உ. ……………………………………………………………………………………………

5. நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையாகவிருப்பின் கையுழவுயந்திரத்தினதும் இழுவையிணைப்பு வண்டியினதும் பதிவிலக்கம்: ………………………………………………………………………………………………………………………

6. பதிவு செய்யப்பட்ட பிரதேச செயலாளரின் பிரிவு: ……………...…………………………………………… ………………………………………………………………………………………………………………………

7. வெட்டுமரச்சாலையை மூடுவதற்கு விண்ணப்பிக்கும் காலப்பகுதி: ……………… இலிருந்து …………… வரை

8. மூடுவதற்கான காரணமும் விண்ணப்பத் திகதியும்: ………………………………………………….. ……………………………………………………………………………………………………………

9. மூடுவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்ட காலப்பகுதி: ……………………… இலிருந்து ……………………. வரை

அனுமதிப்பத்திரத்துக்கான கட்டணங்களைச் செலுத்தாமல் மேலேயுள்ள காலப்பகுதியின்போது உங்களது வெட்டுமரச்சாலையை மூடுவதற்கு உங்களுக்கு இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றது. நீங்கள் மீண்டும் வெட்டுமரச்சாலைத் தொழிலைத் தொடங்குவதற்கு விரும்பும்போது வெட்டுமரச்சாலையை மீளத்திறக்கும் திகதிக்கு முப்பது நாட்களுக்கு முன்னர், இவ்வறிவித்தலின் பிரதியுடன் சேர்த்து, பதிவுச் சான்றிதழை வழங்கிய அலுவலருக்கு எழுத்தில் பதிவஞ்சல்மூலம் அறிவிப்பதனூடாக நீங்கள் அத்தகைய நோக்கத்துக்கான அனுமதிப்பத்திரமொன்றைப் பெறுதல் வேண்டும்.

……..……………..………………………...………….
காடு பேணுநர் தலைமையதிபதி/பிரதி காடு பேணுநர்/
பிரதேச காட்டு அலுவலர்

வழங்கும் திகதி: ………………..

## அட்டவணை X

(ஒழுங்குவிதி 17)

### (451ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டம்

காட்டுத் திணைக்களம்

அரியப்படவுள்ள வெட்டுமரம் ஒரு தனியார் காணியிலிருந்து பெறப்பட்டதென்ற நிகழ்வை உறுதிப்படுத்தி நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையிலிருந்து வெட்டுமரத்தை அரிவதற்கு விரும்புகின்ற ஆளொருவருக்கு பரப்பெல்லைக் காட்டு அலுவலரினால்/ பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.

1. விண்ணப்பகாரரின் பெயர்: ………………………………………………………………………………

2. முகவரி …………………………………………………………………………………………………

3. காணியின் பெயர் ……………………………………………………………………………………..

4. (i) வட்டாரம் ………………………………………………………………….........

(ii) பகுதி ………………………………………………………….

(iii) காட்டு வெளிக்கள உதவியாளர் பிரிவு ……………………………………………….

5. பிரதேச செயலாளர் பிரிவு/ கிராம அலுவலர் பிரிவு ……………………………………………………….

6. உறுதி/அளிப்பு/வர்த்தமானி/அனுமதிப்பத்திர இலக்கமும் பதிவுத் திகதியும் ………………………………… ……………………………………………………………………………………………………………

7. (i) வரைபட இலக்கம் ……………………………………………………………………..

(ii) காணித்துண்டு இலக்கம் …………………………………………………………………………

8. வெட்டுமரம் பற்றிய விவரணம்.

| மரங்களின்/ மரக் குற்றிகளின் எண்ணிக்கை | இனம் | வெட்டுமரத்தின் அளவீடுகள் (m/cm) | | |
|---|---|---|---|---|
| | | அகலம் உயரம் சுற்றளவு | மத்தியிலான சுற்றளவு | நீளம் |
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |
| 6 | | | | |
| 7 | | | | |

9. மரங்களின்/ மரக்குற்றிகளின் எண்ணிக்கை ……………………………………………………………..

10. அலுவலரின் அடையாளக் குறி ……………………………………………………………………….

11. மேலேயுள்ள வெட்டுமரம் (மரங்கள்/ மரக்குற்றிகள்) மேற்குறிப்பிடப்பட்ட தனியார் காணியில் அமைந்துள்ளன என்றும் ……………… இலிருந்து ……………… வரையான ……………… நாட்களைக்கொண்ட காலப்பகுதிக்கு நடமாடும் வெட்டுமர அரிவு ஆலையைப் பயன்படுத்தி அக்குறிப்பிட்ட காணியினுள் அவ்வெட்டுமரத்தை அரிவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

…………………………………………………………
பரப்பெல்லைக் காட்டு அலுவலர்/பிரதேச செயலாளர்

………………….. அலுவலகத்தில்
…….. ஆம் ஆண்டு, ……………… மாதம் ……… ஆம் நாளன்று.

பிரதி – காவல் சுற்று காட்டு அலுவலர்/ கிராம அலுவலர் - …………………………………

EOG 08 - 0205/2

*ச.வ.-பி 203/33* (VIII)

**(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டம்**

*(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டதின் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வனசீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பவித்ரா வன்னிஆரச்சி
வனசீவராசிகள் மற்றும் வனவள
பாதுகாப்பு அமைச்சர்

பத்தரமுல்லை,
*2023.08.11.*

**ஒழுங்குவிதிகள்**

*2008 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆந்திகதிய 1548/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வன ஒழுங்குவிதிகள், அதற்கான முதலாவது அட்டவணையில், அதன் நிரல் I இல் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு பிரதேசம் தொடர்பிலும் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட சொற்களுக்குப் பதிலாக இதற்கான நிரல் III இல் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன.*

| *நிரல் I*<br>*பிரதேசம்* | *நிரல் II*<br>*நீக்குக* | *நிரல் III*<br>*உட்புகுத்துக* |
|---|---|---|
| 1. கொழும்பு நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு. |
| 2. கம்பஹா நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு. |
| 3. களுத்துறை நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு. |
| 4. கண்டி நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம் கினிசப்பு | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், கினிசப்பு மற்றும் கல் பம்பு. |
| 5. மாத்தளை நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு. |
| 6. நுவரெலியா நிர்வாக மாவட்டம் | பிரம்பு வகைகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம் | பிரம்பு வகைகள், இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம் மற்றும் கல் பம்பு |
| 7. காலி நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு. |
| 8. மாத்தறை நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம் மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல் பம்பு |
| 9. அம்பாந்தோட்டை நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம் மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல் பம்பு |
| 10. யாழ்ப்பாணம் நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம் மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல் பம்பு |

| *நிரல் I*<br>*பிரதேசம்* | *நிரல் II*<br>*நீக்குக* | *நிரல் III*<br>*உட்புகுத்துக* |
|---|---|---|
| 11. மன்னார் நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு |
| 12. வவுனியா நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு |
| 13. முல்லைத்தீவு நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு |
| 14. கிளிநொச்சி நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு |
| 15. அம்பாறை நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல்பம்பு |
| 16. மட்டக்களப்பு நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல்பம்பு |
| 17. திருகோணமலை நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல் பம்பு |
| 18. குருநாகல் நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு |
| 19. புத்தளம் நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல்பம்பு |
| 20. அநுராதபுரம் நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல் பம்பு |
| 21. பொலன்னறுவை நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல் பம்பு |
| 22. மொனராகலை நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், மற்றும் டுனா | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், டுனா மற்றும் கல் பம்பு |
| 23. பதுளை நிர்வாக மாவட்டம் | பிரம்பு வகைகள் இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், | பிரம்பு வகை இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம் மற்றும் கல் பம்பு |
| 24. இரத்தினபுரி நிர்வாக மாவட்டம் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், மற்றும் இயுக்கலிப்டஸ் இன வகைகள் | இறக்குமதி செய்யப்பட்ட அரிந்த மரம், இயுக்கலிப்டஸ் இன வகைகள், மற்றும் கல் பம்பு |
| 25. கேகாலை நிர்வாக மாவட்டம் | இயுக்கலிப்டஸ் இன வகைகள் மற்றும் டுனா | இயுக்கலிப்டஸ் இன வகைகள், டுனா மற்றும் கல் பம்பு |

*ச.வ.பீ. 203/33* (V)

**(*451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டம்***

*(451ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் 3அ என்னும் பிரிவின் (3)ஆம், (4)ஆம் மற்றும் (5)ஆம் உட்பிரிவுகள், பிரிவு 6 மற்றும் பிரிவு 64 ஆகியவற்றின்கீழ் வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**பவித்ரா வன்னிஆரச்சி,**
வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023, ஓகத்து 11.*

**ஒழுங்குவிதிகள்**

1. (1) இவ்வொழுங்குவிதிகள், 2023ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, காடு பேணல் (பேணுகைக் காடுகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2023.08. 21 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் கட்டளைச்சட்டத்தின் 3அ என்னும் பிரிவின் நியதிகளுக்கமைய வெளிப்படுத்தப்பட்ட எல்லாப் பேணுகைக் காடுகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

2. (1) கட்டளைச்சட்டத்தின் 3அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி காடுபேணுநர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட முகாமைத்துவத் திட்டமானது பின்வருவனவற்றுக்கான நடவடிக்கைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) பேணுகைக் காடுகளிலுள்ள தனித்துவமான சூழற்றொகுதிகள், மரபணு மூலவளங்கள், தாவர, விலங்கின மற்றும் நுண்ணுயிரிகளின் அரிய மற்றும் பூர்வீக உயிரினங்களின் வாழ்விடங்கள் அத்துடன் அச்சுறுத்தப்பட்ட உயிரினங்கள் என்பவற்றைப் பாதுகாத்தல்;

(ஆ) உப்பேற்றத்தையும் ஆறுகள் உலர்ந்துபோவதையும் தடுப்பதன்மூலமும் மற்றும் நிலச்சரிவுகளையும் தீப்பிடிப்புக்களையும் தடுப்பதன்மூலமும் பேணுகைக் காடுகளில் சூழல்சார் சமநிலையொன்றை அடைதல்.

(2) முகாமைத்துவத் திட்டம் பின்வருவனவற்றுக்கான செயல்முறைமைகளை அல்லது கட்டளைக்கற்களைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) தேவையானவாறாகவும் தேவைப்படுகின்றபோதும், நிலஅளவைகளை மேற்கொண்டு எல்லைகளை அடையாளமிடுவதற்காக;

(ஆ) அவசியமாகவுள்ளவிடத்து பேணுகைக் காடுகளை வலயமாக்குவதற்காக;

(இ) எவ்விடப்பரப்புக்களினுள் பேணுகைக் காடுகளின் முகாமைத்துவத்துக்காக குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அவ்விடப்பரப்புக்களை அடையாளம் காண்பதற்காக;

(ஈ) பேணுகைக் காடுகளின் முகாமைத்துவத்துக்காகத் தேவைப்படுத்தப்படும் செயற்பாடுகளை அடையாளம் காண்பதற்காகவும் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகவும்; அத்துடன்

(உ) பேணுகைக் காடுகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்காகவும் நடைமுறைப்படுத்துவதற்காகவும்.

3. (1) காடுபேணுநர் தலைமையதிபதி, முகாமைத்துவத் திட்டத்துக்கு அவருடைய அங்கீகாரத்தைக் குறித்துக்காட்டுவதற்கென அது இறுதியாக்கப்பட்டவுடன் அவரது கையொப்பத்தை இடுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு அவர் பொறுப்புடையவராக இருத்தலும் வேண்டும்.

*(2) காடு பேணுநர் தலைமையதிபதி, பேணுகைக் காடுகளின் நிலைத்திருப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு அவசியமானவிடத்து முகாமைத்துவத் திட்டத்துக்கு திருத்தங்களைச் செய்யலாம்.*

*(3) காடுபேணுநர் தலைமையதிபதி, அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவத் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளைக் கண்காணிப்பதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறையையும் மற்றும் அத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் அத்தகைய திட்டத்தின் பயனுறுதன்மையை மதிப்பீடு செய்வதற்காகவும் வழிகாட்டுநெறிகளின்மூலம் குறித்துரைத்தல் வேண்டும்.*

*4. (1) பேணுகைக் காடொன்றில் விஞ்ஞான ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், பொருளளவில் முதலாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் காடுபேணுநர் தலைமையதிபதிக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.*

*(2) விண்ணப்பகாரர், அவரது ஆராய்ச்சியின் நோக்கத்தையும் நோக்கெல்லையையும் குறித்துரைத்து ஆராய்ச்சி பற்றிய முன்மொழிவுவொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(3) காடுபேணுநர் தலைமையதிபதி, அத்தகைய ஆராய்ச்சி முன்மொழிவைக் கவனத்துட்கொள்வதன்மேல், இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய அத்தகைய விஞ்ஞான ஆராய்ச்சியை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றை வழங்கலாம்.*

*(4) இவ்வொழுங்குவிதிகளின்கீழ் விஞ்ஞான ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கும் தாவர மற்றும் விலங்கினங்களை அவதானிப்பதற்காகப் பேணுகைக் காடொன்றினுள் நுழைவதற்கும் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனுமாள், மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.*

*(5) விஞ்ஞான ஆராய்ச்சியொன்றை நடாத்துவது தொடர்பில் அனுமதிப்பத்திரத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் நோக்கெல்லைக்கப்பால் ஏதேனும் கருமம் எழுகின்றவிடத்து, ஆராய்ச்சியை நடாத்துகின்ற ஆளினால் காடுபேணுநர் தலைமையதிபதியின் முன்னங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்.*

*5. (1) பேணுகைக் காடொன்றில் தாவர மற்றும் விலங்கினங்களை அவதானிக்க விரும்புகின்ற எவரேனுமாள் அதுசார்பில் காடுபேணுநர் தலைமையதிபதிக்குக் கோரிக்கையொன்றைச் செய்யலாம்.*

*(2) பந்தி (1) இன்கீழான கோரிக்கையொன்றைப் பெற்றதன்மேல் காடுபேணுநர் தலைமையதிபதி, அவர் அவசியமெனக் கருதுகின்ற அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய இயைபான பேணுகைக் காட்டில் நுழைவதற்கும் தாவர மற்றும் விலங்கினங்களை அவதானிப்பதற்குமான அங்கீகாரத்தை வழங்கலாம்.*

*6. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக —*

*"காடுபேணுநர் தலைமையதிபதி" என்பது, (451ஆம் அத்தியாயமான) கட்டளைச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட காடுபேணுநர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;*

*"திணைக்களம்" என்பது, கட்டளைச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட காடுபேணல் திணைக்களம் எனப் பொருள்படும்;*

*"முகாமைத்துவத் திட்டம்" என்பது, பேணுகைக் காடுகளின் விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவத்துக்காகக் கட்டளைச்சட்டத்தின் 3அ எனும் பிரிவின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்டதும் காடுபேணுநர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு திட்டம் எனப் பொருள்படும்;*

*"கட்டளைச்சட்டம்" என்பது, (451ஆம் அத்தியாயமான) காடுபேணற் கட்டளைச்சட்டம் எனப் பொருள்படும்; அத்துடன்*

*"பிரதேசத்தில் வதிபவர்கள்" என்பது, இயைபான பேணுகைக் காட்டின் எல்லையிலிருந்து ஒரு வான் கிலோமீட்டர் தூரத்தினுள் நிரந்தரமாக வதிபவர்கள் எனப் பொருள்படும்.*

## முதலாம் அட்டவணை

{ஒழுங்குவிதி 4(1)}

அலுவலகப் பாவனைக்காக:

தேசிய வனத்துறை ஆராய்ச்சிக் குழு

ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்கான விண்ணப்பம்

| | |
|---|---|
| கருத்திட்ட அடையாளம் | |
| பேணுகைக் காடு | |
| விலங்கினம்/ தாவரயினம்/வேறு………… | |

**1. கருத்திட்டம் பற்றிய தகவல்கள்**

1.1 கருத்திட்டத் தலைப்பு

| |
|---|
| |

1.2 குறிக்கோள்கள்

| |
|---|
| |

1.3 துறை: தாவரயினம்/ விலங்கினம்/வேறு (குறித்துரைக்கவும்) …………………………

1.4 கருத்திட்ட அமைவிடங்கள்

| | மாவட்டம் | காடு | | |
|---|---|---|---|---|
| 1 | | | 1.5 உயிரினங்களின் வகுதி | 1.6 ஆய்வுப் பரப்பு |
| 2 | | | பூக்கும் தாவரங்கள் | உயிரிப் பல்வகைமை |
| 3 | | | தாழ்வகைத் தாவரங்கள் | உயிரினத்தொகுதி/ காபன் |
| 4 | | | நுண்ணுயிரிகள் | பேணல் |
| 5 | | | பாலூட்டி | சூழலியல் |
| 6 | | | ஈரூடகவாழிகள் | சூழல்சார் சுற்றுலா |
| 7 | | | ஊர்வன | இனப்பெருக்கம் |
| 8 | | | மீன்கள் | வகைப்பாட்டியல் |
| 9 | | | பறவைகள் | ………………………… |
| 10 | | | பூச்சிகள் | ………………………… |
| 11 | | | ………………………… | ………………………… |
| 12 | | | ………………………… | ………………………… |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1.7 | கருத்திட்டத்தின் காலப்பகுதி | | இருந்து | | வரை | |
| 1.8 | தரவு சேகரிப்புக் காலப்பகுதி | | இருந்து | | வரை | |

*1.9* கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு

*1.10* நிதி மூலம்

**2. தனிப்பட்ட தகவல்கள்**

*2.1* முதன்மை நுண்ணாய்வாளர்

| | | |
|---|---|---|
| முதலெழுத்துக்களுடன் பெயர் | பேராசிரியர்/கலாநிதி/திரு/திருவாட்டி | |
| பதவி | | |
| நிறுவனம் | | |
| அலுவலக தொலைபேசி இல. | | அலுவலக முகவரி |
| தனிப்பட்ட முகவரி | | வதிவிட தொலைபேசி இல.<br><br>கைபேசி இல. |
| தேசியம் | | தேஅஅ இல. |
| மின்னஞ்சல் முகவரி | | |

*2.2* ஏனைய கூட்டுழைக்கும் ஆய்வாளர்கள்

| | பெயர் | பதவி / நிறுவனம் | தே.அ.அ. | தொலைபேசி இல. |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |

*2.3* கள ஆய்வுப் பணியாட்டொகுதி

| | பெயர் | பதவி / நிறுவனம் | தே.அ.அ. | தொலைபேசி இல. |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |
| 3 | | | | |
| 4 | | | | |
| 5 | | | | |

**3. ஆராய்ச்சி பற்றிய விவரணம்**

| | |
|---|---|
| 3.1 | நியாயப்படுத்துகை, முறைமையியல், கால வரையறை மற்றும் உட்கருதப்பட்ட வெளியீடு ஆகியவற்றுடன் கருத்திட்டம் பற்றிய சுருக்கம். ஆராய்ச்சி பற்றிய முன்மொழிவின் பிரதியொன்றை இணைக்கவும் |
| 3.2 | ஆராய்ச்சியை நடாத்துவதற்குத் தேவையெனில், வேறு இயைபான நிறுவனங்களிடமிருந்து அவசியமான அனுமதியை நீர் பெற்றுள்ளீரா? (அனுமதிக் கடிதங்களின் பிரதியொன்றை இணைக்கவும்) |

**4. முந்தைய ஆராய்ச்சிகள் பற்றிய தகவல்கள்**

கடந்த பத்து ஆண்டுகளினுள் பேணுகைக் காடொன்றில் (முதன்மை நுண்ணாய்வாளராக அல்லது கூட்டுழைக்கும் ஆராய்ச்சியாளராக) விண்ணப்பகாரரினால் நடாத்தப்பட்ட முந்தைய ஆய்வு ஏதேனுமிருப்பின் அதுபற்றிய விபரங்களைக் கீழே குறிப்பிடுங்கள்.

| கருத்திட்டத்தின் தலைப்பு (சுருக்கமான) | அனுமதி ஆண்டு | கருத்திட்டத்தின் முதன்மை நுண்ணாய்வாளர் (PI) | அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது (ஆம்/இல்லை) |
|---|---|---|---|
| | | | |

**5. நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

5.1 முதன்மை நுண்ணாய்வாளரின் சான்றிதழ்

............................................. ஆகிய நான் (முழுப் பெயர்), என்னால் கொடுத்துதவப்பட்ட எல்லா விபரங்களும் உண்மையானவையும் சரியானவையுமாகும் என இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். ஆராய்ச்சி தொடர்பில் காடுபேணல் திணைக்களத்தினால் விதிக்கப்பட்ட வழிகாட்டுநெறிகள் மற்றும் நிபந்தனைகளைப் பின்பற்றுவதற்கும் மற்றும் காடுபேணற் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கியொழுகுவதற்கும் உடன்படுகின்றேன்.

பெயர் : பேராசிரியர்/ கலாநிதி/ திரு/ திருவாட்டி

பதவி :

நிறுவனம் :

திகதி :

விண்ணப்பகாரரின் கையொப்பம்

5.2 நிறுவனத் தலைவரின் சான்றிதழ்

பேராசிரியர்/ கலாநிதி/ திரு/ திருவாட்டி ………………………………………………….. அவர்களின் விண்ணப்பத்துக்கான அங்கீகாரம் இத்தால் வழங்கப்படுகின்றது என்பதுடன் ஆராய்ச்சிக்காக நிறுவனத்தின் வசதிகள் விண்ணப்பகாரருக்கு வழங்கப்படும் என்றும் இத்தால் குறிப்பிடப்படுகின்றது.

பெயர் : பேராசிரியர்/ கலாநிதி/ திரு/ திருவாட்டி

தொடர்பு இல :

திகதி :

நிறுவனத் தலைவரின் கையொப்பம்

## இரண்டாம் அட்டவணை

{ஒழுங்குவிதி 4(**3**)}

ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கான நிபந்தனைகள்

1. பேணுகைக் காடொன்றினுள் ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரத்துக்காக பொருளளவில் முதலாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் தயாரிக்கப்பட்ட ஏதேனும் விண்ணப்பம், ஆராய்ச்சிச் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னர் காடுபேணுநர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2. தேசிய வனத்துறை ஆராய்ச்சிக் குழுவின் விதப்புரைகளின் அடிப்படையிலும் மூன்றாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட கட்டணச் செலுத்துகையின் மீதும், காடுபேணுநர் தலைமையதிபதியினால் அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது கூடியபட்சமாக ஓராண்டு காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தின் நீடிப்புக்காக, ஆராய்ச்சியின் முன்னேற்ற அறிக்கையுடன் சேர்த்து அதற்கான காரணங்களைத் தெரிவித்து, ஆகக்குறைந்தது அனுமதிக்கப்பட்ட காலப்பகுதி கழிவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் கோரிக்கையொன்று செய்யப்படுதல் வேண்டும்.

3. விஞ்ஞான ஆராய்ச்சியொன்றுக்காக பேணுகைக் காடொன்றினுள் பிரவேசிக்கின்ற எவரேனுமாள், காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான கூட்டத்துக்கும் அமைந்தவராக இருத்தல் வேண்டும்.

4. பேணுகைக் காடொன்றினுள் விஞ்ஞான ஆராய்ச்சியொன்றுடன் தொடர்புடைய ஏதேனும் செயற்பாடு அல்லது ஆய்வானது, காட்டு அலுவலர்களின் மேற்பார்வையின்கீழ் செய்யப்படுதல் அல்லது நடாத்தப்படுதல் வேண்டும்.

5. அனுமதிப்பத்திரம் கைமாற்றப்படத்தக்கதாதல் ஆகாது. எவரேனும் ஆராய்ச்சியாளர் அவரது ஆராய்ச்சிக் கருத்திட்டத்துக்கு ஏதேனும் மாற்றத்தைச் செய்ய உட்கருதுகின்றவிடத்து, காடுபேணுநர் தலைமையதிபதியிடமிருந்து அதற்கான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. எவரேனும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர் அவரது ஆராய்ச்சி விண்ணப்பத்தை அவரது நிறுவனத்தின் தலைவருக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய ஆராய்ச்சிக் கருத்திட்டம் அரச இணைப்புப்பெற்ற உள்நாட்டு ஆராய்ச்சி நிறுவகமொன்றின் அல்லது காடுபேணல் திணைக்களத்தின் கூட்டுழைப்புடன் நடாத்தப்படுதல் வேண்டும். அத்தகைய உள்நாட்டு நிறுவகத்தின் தலைவர் ஆராய்ச்சிக் கருத்திட்டத்தை அங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் முதன்மை நுண்ணாய்வாளர் இயைபான உள்நாட்டு ஆராய்ச்சி நிறுவகத்தைச் சேர்ந்த ஆளொருவராக இருத்தலும் வேண்டும்.

7. ஆராய்ச்சியாளரினால் அனுமதிப்பபத்திரத்தின் நிபந்தனையொன்று மீறப்படுதல் பற்றிய ஏதேனும் வெளிப்படுத்துகையானது அனுமதிப்பத்திரத்தின் இல்லாதொழிப்பை அல்லது வேறேதேனும் ஆராய்ச்சியை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திர மொன்றுக்கான ஏதேனும் எதிர்காலக் கோரிக்கைக்கான மறுப்பை விளைவிக்கலாம்.

8. ஆராய்ச்சிக் காலப்பகுதியின் போது எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனுமோர் ஆதனத்துக்கு ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் சேதத்துக்கு அல்லது இழப்புக்கு காடுபேணல் திணைக்களம் பொறுப்பாதலாகாது.

9. ஆராய்ச்சியின் பெறுபேறுகள் அல்லது கண்டறிதல்கள் பற்றிய அறிக்கையொன்று, அவ்வாராய்ச்சிக் கருத்திட்டம் நிறைவடைந்த பின்னர் ஆறு மாதங்களினுள் காடுபேணல் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். காடுபேணுநர் தலைமையதிபதி, காடுபேணல் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு ஆராய்ச்சியின் கண்டறிதல்கள் பற்றிய முன்வைப்பொன்றை நடாத்துமாறு ஆராய்சியாளரைக் கோரலாம். பொருள்விளக்கக் கட்டுரை, ஆராய்ச்சிப் பத்திரங்கள் மற்றும் ஆராய்ச்சியின் கண்டறிதல்களையும் உள்ளடக்கிய கருத்தரங்குகளின் அறிக்கைகள் ஆகியவற்றின் பிரதிகள் காடுபேணல் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இத்தேவைப்பாடுகள் எதிர்கால ஆராய்ச்சி வேலையொன்றுக்கான கோரிக்கையொன்று செய்யப்பட முன்னர் புரணப்படுத்தப்படுதல் வேண்டும்.

10. ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் தன்மையை அடிப்டையாகக்கொண்டு காடுபேணுநர் தலைமையதிபதி வேறு எவையேனும் நிபந்தனைகளை விதிக்கலாம்.

நான்/ நாம் மேலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கியொழுக இத்தால் உடன்படுகின்றேன்/ உடன்படுகின்றோம்.

பெயர் : ................................
பதவி : ..................................
நிறுவனம் : ..............................
திகதி : .....................................

முதன்மை நுண்ணாய்வாளரின்

கையொப்பம்.

**மூன்றாம் அட்டவணை**

{ஒழுங்குவிதி 4(**4**)}

கட்டணங்கள்

| | |
|---|---|
| 01. பட்டப்படிப்பு மாணவர்களினால் நடாத்தப்படும் ஆராய்ச்சியொன்றுக்காக | கட்டணம் இல்லை |
| 02. ஓராண்டு ஆராய்ச்சிக் கருத்திட்டம் | ரூபா. 5000.00 |
| 03. ஓராண்டு நீடிப்புக்கு | ரூபா. 2500.00 |
| 04. ஆராய்ச்சிக் கருத்திட்டமொன்றுக்கான மீளளிக்கப்படத்தகு பணவைப்பு (இது இல. 01 இற்குப் பொருந்தாது) | ரூபா. 10,000.00 |

*ச.வ.பி. 203/33***(v)**

*(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டம்*

*(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவு மற்றும் 64 ஆம் பிரிவு ஆகியவற்றின்கீழ் வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பவித்ரா வன்னிஆரச்சி
வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு
*2023.08.11.*

**ஒழுங்குவிதிகள்**

*1. (1)* இவ்வொழுங்குவிதிகள் *2023* ஆம் ஆண்டின் *04* ஆம் இலக்க காடு பேணல் (ஒதுக்கப்பட்ட காடுகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் *2023.08.21* அன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*(2)* இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எல்லா ஒதுக்கப்பட்ட காடுகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*2.* கட்டளைச்சட்டத்தின் *3*ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி காடு பேணுநர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட முகாமைத்துவத் திட்டமானது பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(அ) ஒதுக்கப்பட்ட காடுகளினுள் உயிர் பல்வகைத்தன்மை, மண் மற்றும் நீர் என்பவற்றைப் பேணுவதற்காகவும் மற்றும் அதன் தனித்துவமான சூழல் முறைமை, மரபணு வளங்கள் மற்றும் அரியதும் தனித்துவமானதுமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களின் வதிவிடமாக இருக்குமாறு அவற்றைப் பேணிக்காத்தலுக்காகவும் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகளை உள்ளடக்கியிருத்தல்; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப பின்வரும் முறைமைகள் அல்லது கட்டளைக்கற்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(i) தேவைப்படுமிடத்தும் மற்றும் தேவையானவாறும், ஒதுக்கப்பட்ட காடுகளின் எல்லைகளை நில அளவை செய்தலுக்காகவும் மற்றும் எல்லைகளைக் குறிப்பதற்காகவும்;

(ii) அவசியமானவிடத்து, ஒதுக்கப்பட்ட காடுகளை முகாமைத்துவ வலயங்களாகப் பிரிக்கவும் அத்தகைய வலயங்களின் எல்லைகளை மாற்றுவதற்காகவும்;

(iii) நடைமுறைப்படுத்தப்படவேண்டிய ஒதுக்கப்பட்ட காடுகளின் முகாமைத்துவத்துக்குத் தேவைப்படுத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளினுள் இடப்பரப்புக்களை அடையாளப்படுத்துவதற்காக;

(iv) ஒதுக்கப்பட்ட காடுகளின் முகாமைத்துவத்துக்குத் தேவைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளை அடையாளம் காண்பதற்காகவும் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகவும்;

(v) ஒதுக்கப்பட்ட காடுகளைப் பாதுகாப்பதற்குத் தோதான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்காகவும் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்காகவும்; அத்துடன்

(vi) ஒதுக்கப்பட்ட காடுகளின் காட்டு உற்பத்திகளின் நிலையான பயன்பாட்டுக்காக.

*3. (1)* காடுபேணுநர் தலைமையதிபதி, முகாமைத்துவத் திட்டத்துக்கு அவருடைய அங்கீகாரத்தைக் குறித்துக்காட்டும் பொருட்டு அது இறுதியாக்கப்பட்டவுடன் அவரது கையொப்பத்தை இடுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவத் திட்டத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு அவர் பொறுப்புடையவராக இருத்தலும் வேண்டும்.

(2) காடுபேணுநர் தலைமையதிபதி ஒதுக்கப்பட்ட காடுகளின் நிலைத்திருப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு அவசியமானவிடத்து முகாமைத்துவத் திட்டத்துக்கு திருத்தங்களைச் செய்யலாம்.

(3) காடுபேணுநர் தலைமையதிபதி, அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகளைக் கண்காணிப்பதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் மற்றும் அத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் அத்தகைய திட்டத்தின் பயனுறு தன்மையை மதிப்பீடு செய்வதற்காகவும் வழிகாட்டுநெறிகளின் மூலம் குறித்துரைத்தல் வேண்டும்.

4. (1) காடுபேணுநர் தலைமையதிபதியினால், ஒதுக்கப்பட்ட காடுகளின் நிலையான முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் அத்தகைய நோக்கத்துக்காக முகாமைத்துவ உடன்படிக்கையொன்றில் ஈடுபடுவதற்கமைவாக, அவசியமானவிடத்து, சமூகத்தினரின் மற்றும் அரசசார்பற்ற துறையாளரின் பங்களிப்பைப் பெறலாம்.

(2) ஒதுக்கப்பட்ட காடொன்றின் முகாமைத்துவத்துக்காக மேலே குறித்துரைக்கப்பட்டதான முகாமைத்துவ உடன்படிக்கையொன்றினுள் ஈடுபடுவதற்குத் தேவைப்படுகின்றவிடத்து, காடு பேணுநர் தலைமையதிபதியானவர் உடன்படிக்கையைத் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய உடன்படிக்கையானது உடன்படிக்கைக்கான திறத்தவர்களாகவுள்ள எல்லா அக்கறைகொண்டுள்ளோரினாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்.

(3) முகாமைத்துவத் திட்டத்தின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு (1)ஆம் பந்தியின்கீழ் முகாமைத்துவ உடன்படிக்கையொன்று இருக்குமிடத்து, சமூகத்துக்கும் மற்றும் அரசசார்பற்ற துறையினருக்கும் நடைமுறைப்படுத்துதல் நன்மை பயக்குமிடத்தும், காடுபேணுநர் தலைமையதிபதியானவர், சமூகத்தினரால் மற்றும் அரசசார்பற்ற துறையினரால் அத்தகைய காட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணரீதியிலான மற்றும் பணரீதியற்ற நன்மைகளின் விகிதாசாரத்தின் பெறுமதியைப் பிரதிபலிக்கின்ற கட்டணமொன்றைத் தீர்மானித்தலும் சேகரித்தலும் வேண்டும். பெறப்பட்ட நன்மைகளை வெளிவிடாமையானது கட்டளைச்சட்டத்தின் கீழ் தவறொன்றாதல் வேண்டும்.

5. காடு பேணுநர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரமானது முகாமைத்துவத் திட்டத்தின் நடைமுறைப் படுத்தலிலிருந்து எழுகின்ற அல்லது அது தொடர்பான ஏதேனும் கடமையினை நிறைவேற்றும் நோக்கத்திற்காக, ஒதுக்கப்பட்ட காடொன்றினுள் ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளவரான ஒவ்வோர் ஆளினாலும் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

6. (1) காடுபேணுநர் தலைமையதிபதி உள்ளூர் சமூகத்திற்கு பின்வருவனவற்றிற்காக அனுமதியை வழங்கலாம்:-

(அ) ஏதேனும் ஒதுக்கப்பட்ட காட்டிலிருந்து இறந்த மற்றும் கீழே விழுந்த தடிகளை அகற்றுவதற்காக:

ஆயின்,

(i) அவ்விறந்த மற்றும் கீழே விழுந்த தடிகள் வீட்டு எரிபொருள் தேவைகளுக்கு விறகாகப் பயன்படுத்தப் படலாமென்பதுடன், ஒரு மீட்டர் நீளத்துக்கு மேற்படாத துண்டுகளாக அவற்றை வெட்டிய பின்னர் அத்தடிகள் காட்டிலிருந்து அகற்றப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ii) ஆளெவரும் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு இறந்த மற்றும் கீழே விழுந்த தடிகளை அகற்றுதல் அல்லது இழுத்துச் செல்லுதல் ஆகாது என்பதுடன், அவர்கள் காட்டு அலுவலர்களால் சுட்டிக்காட்டப்பட்டவாறான இடங்களிலுள்ள பூச்சிகள், நுண்ணுயிரிகள் மற்றும் வேறு தாவர விலங்கினங்களுக்கான வாழிடங்களை ஏற்பாடு செய்வதற்காக போதியளவானதான இறந்த மரத்தை விட்டு வைத்தலும் வேண்டும்;

(ஆ) மரபணு மூலவளங்கள், சூழல் முறைமைகள் மற்றும் அரிதானதும் ஆபத்துக்குள்ளானதுமான விலங்குகள் மற்றும் தாவரங்களின் பேணலைப் பாதகமாகப் பாதிக்கின்றதல்லாத முறையொன்றில் ஏதேனும் ஒதுக்கப்பட்ட காட்டிலுள்ள வெட்டுமரமல்லாத காட்டு உற்பத்தியின் சேகரிப்புக்காக மற்றும் அகற்றுவதற்காக; அத்துடன்

(இ) நீரூற்று, ஊற்று அல்லது நீர் வளங்களின் நீரோட்டத்தின் மேல் மற்றும் கீழ் பிரதேசங்களில் உள்ள நீரியல் உயிரின வாழ்விடங்களுக்கு இடையூறின்றி குடிநீர் நோக்கத்துக்காக ஏதேனும் ஒதுக்கப்பட்ட காட்டிலுள்ள அத்தகைய இயற்கையான நீரூற்று, ஊற்று மற்றும் இயற்கை வளங்களிலிருந்து நீரைப் பயன்படுத்துவதற்காக.

(2) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடெதுவும், அத்தகைய நோக்கத்துக்காக வழங்கப்பட்ட அனுமதியில் தரப்பட்டுள்ளவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைவாகவன்றி வேறுவகையில் செய்யப்படுதலாகாது.

7. (1) ஒதுக்கப்பட்ட காடொன்றில் விஞ்ஞான ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள், காடுபேணுநர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவத்தில் அவருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) காடுபேணுநர் தலைமையதிபதி, அத்தகைய விண்ணப்பத்தைக் கவனத்துட்கொள்வதன்மேல், அட்டவணையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய விஞ்ஞான ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றை வழங்கலாம்.

(3) இவ்வொழுங்குவிதியின்கீழ் விஞ்ஞான ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள எவரேனுமாள், காடுபேணுநர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான கட்டணமொன்றைச் செலுத்துவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(4) விஞ்ஞான ஆராய்ச்சியொன்றை நடாத்துவது தொடர்பில் அனுமதிப்பத்திரத்தின்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் நோக்கெல்லைக்கப்பால் ஏதேனும் கருமம் எழுகின்றவிடத்து, ஆராய்ச்சியை நடாத்துகின்ற ஆளினால் காடுபேணுநர் தலைமையதிபதியின் முன்னங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்.

8. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக -

"காடுபேணுநர் தலைமையதிபதி" என்பது, கட்டளைச்சட்டத்தின் 58ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட காடுபேணுநர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"விறகு" என்பது, 1 மீற்றர் நீளத்தை (3 அடிகள்) விஞ்சாததும், இரு முனைகளிலும் சுற்றளவு 45 சென்றி மீற்றர்களை (18 அங்குலம்) விஞ்சாததுமான கட்டளைச்சட்டத்தின் I மற்றும் II ஆம் அட்டவணைகளில் தரப்பட்டுள்ள எவையேனும் இனங்கள் தவிர்ந்த அத்தகைய இனங்களின் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுக்கு இணங்கியொழுகுகின்ற கிளைகளும் உள்ளடங்கும் எனப் பொருள்படும்;

'உள்ளூர் சமூகம்' என்பது இயைபான ஒதுக்கப்பட்ட காட்டு எல்லையிலிருந்து ஒரு வான் கிலோ மீட்டர் தூரத்தினுள் முழுமையாக அல்லது பகுதியளவில் அமைந்துள்ள கிராம அலுவலர் பிரிவிலுள்ள நிரந்தர வதிவாளர்கள் என்று பொருள்படும்;

"முகாமைத்துவத் திட்டம்" என்பது ஏதேனும் காட்டின் விஞ்ஞான ரீதியிலான முகாமைத்துவத்துக்காக கட்டளைச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்டதும் காடுபேணுநர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுமான திட்டம் எனப் பொருள்படும்;

"வெட்டுமரமல்லாத காட்டு உற்பத்தி" என்பது, இலைகள், பூக்கள், கொட்டைகள், விதைகள், பழங்கள், வேர்கள், சாறு, எண்ணெய், கடுக்காய்கள், பிசின், பசை, திப்பல், மூலிகைச் செடிகள் மற்றும் அவற்றின் பாகங்கள் அல்லது அதிலிருந்து உருவாக்கப்பட்ட பதார்த்தங்கள், புல், படரும் கொடிகள், மூங்கில், நாணல்கள், பாசி, பிரம்பு, காளான் மற்றும் தேன் எனப் பொருள்படும்.

"கட்டளைச்சட்டம்" என்பது (451ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டம் எனப் பொருள்படும்;

"ஒதுக்கப்பட்ட காடு" என்பது, கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒதுக்கப்பட்ட காடொன்றாக வெளிப்படுத்தப்பட்ட ஒரு காடு மற்றும் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒதுக்கப்பட்டுள்ளனவையாகக் கருதப்பட்ட காடுகள் எனப் பொருள்படும்; அத்துடன்

'தடிகள்' என்பது மத்தியில் சுற்றளவு 45 சென்டிமீட்டருக்கு குறைவாகவுள்ள எவையேனும் தாவர இனங்களின் இறந்த அல்லது கீழே விழுந்ததான ஏதேனும் மரம் என்றும் பொருள்படும்.

[ஒழுங்குவிதி 7(2)]

## அட்டவணை

விஞ்ஞான ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கான நிபந்தனைகள்

1. ஒதுக்கப்பட்ட காடொன்றினுள் விஞ்ஞான ஆராய்ச்சியொன்றை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரத்துக்கான ஏதேனும் விண்ணப்பம் காடுபேணுநர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான படிவத்தில் பொருளளவில் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஆராய்ச்சிச் செயற்பாடுகளைத் தொடங்குவதற்கு ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னர் காடுபேணுநர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

2. தேசிய வனத்துறை ஆராய்ச்சிக் குழுவின் விதப்புரைகளின் அடிப்படையிலும் மற்றும் காடுபேணுநர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான கட்டணக் கொடுப்பனவின்மீதும், காடு பேணுநர் தலைமையதிபதியினால் அல்லது அதற்கென அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமானது கூடியபட்சமாக ஓராண்டு காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தின் நீடிப்புக்காக, ஆராய்ச்சியின் முன்னேற்ற அறிக்கையுடன் சேர்த்து காரணங்களைத் தெரிவித்து, ஆகக்குறைந்தது அனுமதிக்கப்பட்ட காலப்பகுதி கழிவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் கோரிக்கையொன்று செய்யப்படுதல் வேண்டும்.

3. விஞ்ஞான ஆராய்ச்சியொன்றுக்காக ஒதுக்கப்பட்ட காடொன்றினுள் பிரவேசிக்கின்ற எவரேனுமாள், காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கும் அமைந்தவராக இருத்தல் வேண்டும்.

4. ஒதுக்கப்பட்ட காடொன்றினுள் விஞ்ஞான ஆராய்ச்சியொன்றுடன் தொடர்புடைய ஏதேனும் செயற்பாடு அல்லது ஆய்வானது, காட்டு அலுவலர்களின் மேற்பார்வையின்கீழ் செய்யப்படுதல் அல்லது நடாத்தப்படுதல் வேண்டும்.

5. அனுமதிப்பத்திரம் கைமாற்றப்படத்தக்கதாதல் ஆகாது. எவரேனும் ஆராய்ச்சியாளர் அவரது ஆராய்ச்சிக் கருத்திட்டத்துக்கு ஏதேனும் மாற்றத்தைச் செய்ய உட்கருதுகின்றவிடத்து, காடுபேணுநர் தலைமையதிபதியிடமிருந்து அதற்கான முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. எவரேனும் வெளிநாட்டு ஆராய்ச்சியாளர் அவரது ஆராய்ச்சி விண்ணப்பத்தை அவரது நிறுவனத்தின் தலைவருக்கூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய ஆராய்ச்சிக் கருத்திட்டம் அரச இணைப்புப்பெற்ற உள்நாட்டு ஆராய்ச்சி நிறுவகமொன்றின் அல்லது காடு பேணல் திணைக்களத்தின் கூட்டுழைப்புடன் நடாத்தப்படுதல் வேண்டும். அத்தகைய உள்நாட்டு நிறுவகத்தின் தலைவர் ஆராய்ச்சிக் கருத்திட்டத்தை அங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் நுண்ணாய்வாளரானவர் இயைபான உள்நாட்டு ஆராய்ச்சி நிறுவகத்தைச் சேர்ந்த ஆளொருவராக இருத்தலும் வேண்டும்.

7. ஆராய்ச்சியாளரினால் அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனையொன்று மீறப்படுதல் பற்றிய ஏதேனும் வெளிப்படுத்துகையானது அனுமதிப்பத்திரத்தின் இல்லாதொழிப்பை அல்லது வேறேதேனும் ஆராய்ச்சியை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றுக்கான ஏதேனும் எதிர்காலக் கோரிக்கைக்கான மறுப்பை விளைவிக்கலாம்.

8. ஆராய்ச்சிக் காலப்பகுதியின்போது எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனுமோர் ஆதனத்துக்கு ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் சேதத்துக்கு அல்லது இழப்புக்கு காடு பேணல் திணைக்களம் பொறுப்பாதலாகாது.

9. ஆராய்ச்சியின் பெறுபேறுகள் அல்லது கண்டறிதல்கள் பற்றிய அறிக்கையொன்று, அவ்வாராய்ச்சிக் கருத்திட்டம் நிறைவடைந்த பின்னர் ஆறு மாதங்களினுள் காடு பேணல் திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். காடுபேணுநர் தலைமையதிபதி, காடு பேணல் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு ஆராய்ச்சியின் கண்டறிதல்கள் பற்றிய முன்வைப்பொன்றை நடாத்துமாறு ஆராய்ச்சியாளரைக் கோரலாம். பொருள்விளக்கக் கட்டுரை, ஆராய்ச்சிப் பத்திரங்கள் மற்றும் ஆராய்ச்சியின் கண்டறிதல்களையும் உள்ளடக்கிய கருத்தரங்குகளின் அறிக்கைகள் ஆகியவற்றின் பிரதிகள் காடுபேணல் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இத்தேவைப்பாடுகள் எதிர்கால ஆராய்ச்சி வேலையொன்றுக்கான கோரிக்கையொன்று செய்யப்பட முன்னர் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும்.

10. ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் தன்மையை அடிப்படையாகக்கொண்டு காடுபேணுநர் தலைமையதிபதி வேறு எவையேனும் நிபந்தனைகளை விதிக்கலாம்.

நான்/ நாம் மேலுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கியொழுக இத்தால் உடன்படுகின்றேன் / றோம்.

பெயர் : ............................................
பதவி : ............................................
நிறுவனம் : .........................................
திகதி : .............................................

முதன்மை நுண்ணாய்வாளரின்
கையொப்பம்.

EOG 08 - 0205/5

---

ச.வ.பீ. 203/33 (vii) (A)

**(451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டம்**

(451ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச்சட்டத்தின் 58 ஆம் மற்றும் 59 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 64 ஆம் பிரிவின்கீழான வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பவித்ரா வன்னிஆரச்சி,**
வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
2023.08.11.

**ஒழுங்குவிதிகள்**

1. (1) இவ்வொழுங்குவிதிகள், 2023 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, காடு பேணல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இவ்வொழுங்குவிதிகள் வன அலுவலர்களின் தத்துவங்கள் மற்றும் கடமைகள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

2. இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்கள் அவர்களது முறையான இடப்பரப்பினுள் அவ்வட்டவணையின் II ஆம் நிரலின் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட காடு பேணல் கட்டளைச்சட்டத்தின் இயைபான பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அவ்வட்டவணையின் III ஆம் நிரலின் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்களை பிரயோகித்தல் வேண்டும்.

3. காடு பேணல் கட்டளைச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி பின்வரும் ஊழியர்கள் தமது அந்தந்த அதிகார இடப்பரப்பினுள் காட்டு அலுவலர்களின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றனர்.

(அ) அக்கட்டளைச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக, அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள், பிரதி முகாமையாளர்கள், பிராந்திய முகாமையாளர்கள், பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள், உதவிப் பிராந்திய முகாமையாளர்கள், மரச்சாலை அலுவலர்கள் அல்லது கூபே (coupe) அலுவலர்கள்; அத்துடன்

(ஆ) அக்கட்டளைச்சட்டத்தின் 58 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் நோக்கத்திற்காக, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள், வனசீவராசி வீச்சாளர்கள், உதவி வனசீவராசி வீச்சாளர்கள் அல்லது வனசீவராசிக் காப்பாளர்கள்.

4. காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 26 ஆந் திகதிய 68/14 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, காட்டு ஒழுங்குவிதிகள் அதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

5. இவ்வொழுங்குவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய-

"காடு பேணல் கட்டளைச்சட்டம்" என்பது, (451 ஆம் அத்தியாயமான) காடு பேணல் கட்டளைச்சட்டம் எனப் பொருள்படும்;

"காட்டு அலுவலர்" என்பது, காடு பேணுநர் தலைமையதிபதியின் பதவிக்கென நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் அல்லது ஆட்கள், மேலதிக காடுபேணுநர் தலைமையதிபதி, காடு பேணுநர்கள், பிரதிக் காடு பேணுநர்கள், உதவிக் காடு பேணுநர்கள், பிரதேச காட்டு அலுவலர்கள், மேலதிக பிரதேச காட்டு அலுவலர்கள், உதவிப் பிரதேச காட்டு அலுவலர்கள், விசேட வனத்துறையினர்கள், வனத் துறையினர்கள், வீச்சு காட்டு அலுவலர்கள், மேலதிக வீச்சு காட்டு அலுவலர்கள், பீற் (Beat) காட்டு அலுவலர்கள், காட்டு கள உதவியாளர்கள், பெருந்தோட்டக் காவலாளர்கள், பொருந்தோட்டத் தொழிலாளர்கள், அல்லது காட்டு தொழிலாளர்கள் அல்லது காடுபேணல் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் அல்லது விதியின்கீழ் காட்டு அலுவலர் ஒருவரின் ஏதேனும் பணியை நிறைவேற்றுவதற்கு பெயர்கொண்டு அல்லது பதவி கொண்டு நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

"அரச மரக் கூட்டுத்தாபனம்" என்பது, 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில்சார் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அரச வெட்டு மரக் கூட்டுத்தாபனம் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 2)

| | நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|---|
| | தத்துவமளிக்கப்பட்ட அலுவலரின் வகுப்பு | எந்தக் காடுபேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் தத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்த காடுபேணல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு | அளிக்கப்பட்ட தத்துவங்களின் தன்மைபற்றிய சுருக்கமான விபரணம் |
| 1. | காடுபேணுநர் தலைமையதிபதி மேலதிக காடுபேணுநர் தலைமையதிபதிகள் மற்றும் காடு பேணுநர்கள் | 3(3) | பிரிவு 3(2) இல் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் ஒதுக்கப்பட்ட காடுகளுக்காக முகாமைத் திட்டங்களை அமுல்படுத்தல். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| | *தத்துவமளிக்கப்பட்ட அலுவலரின் வகுப்பு* | *எந்தக் காடுபேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் தத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்த காடுபேணல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு* | *அளிக்கப்பட்ட தத்துவங்களின் தன்மைபற்றிய சுருக்கமான விபரணம்* |
| | | *3அ (4)* | 3அ (1) என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக விதித்துரைக்கப்படக்கூடியவாறான முறையில் எந்தப் பேணுகைக் காடுகள் தொடர்பில் முகாமைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டனவோ அந்தப் பேணுகைக் காடுகளுக்காக அத்தகைய முகாமைத் திட்டங்களை அமுல்ப்படுத்தல். |
| | | *19* | பிரிவு 19 இல் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக அனுமதி வழங்குதல். |
| | | *24(1)(எ)* | செவ்வைபார்க்கும் நிலையங்களைத் தாபித்தல். |
| | | *24(1)(எஎ)* | இடைப்பெயர்வில் கைப்பற்றப்பட்ட வெட்டுமரங்கள் அல்லது காட்டு உற்பத்திப் பொருட்கள் கொண்டுவரப்படக்கூடியதாக இருக்கும் செவ்வைபார்க்கும் நிலையங்கள் அல்லது இடங்களை பெயர்குறித்து நியமித்தலும் அத்துடன் அவற்றைக் கொண்டுசெல்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும். |
| | | *24(1)(ஐ)* | எந்தக் காணியிலும் அரசிற்கு சொந்தமான வெட்டுமரங்களை கொண்டுசெல்வதற்கு அதிகாரமளித்தல் அத்துடன் அத்தகைய வெட்டுமரங்களை கொண்டு செல்வதனால் அல்லது அகற்றுவதனால் ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்காக செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டை ஒழுங்குபடுத்துதல். |
| *2.* | காடுபேணுநர் தலைமையதிபதி, மேலதிக காடுபேணுநர் தலைமையதிபதிகள், காடு பேணுநர்கள், பிரதிக் காடு பேணுநர்கள், உதவிக் காடு பேணுநர்கள், பிரதேச காட்டு அலுவலர்கள், மேலதிக பிரதேச காட்டு அலுவலர்கள், விசேட வனத்துறையினர்கள் மற்றும் உதவிப் பிரதேச காட்டு அலுவலர்கள். | 5 | பேணுகைக் காடுகள் அல்லது ஒதுக்கப்பட்ட காடுகளில் வழிகள் மற்றும் நீர்வழிகளை நிறுத்துதல். |
| | | *24(1) (எஎ)* | இடைப்பெயர்வில் கைப்பற்றப்பட்ட வெட்டுமரம் அல்லது காட்டு உற்பத்திப்பொருட்கள் கொண்டுவரப்படக்கூடியதாகவிருக்கும் இடங்களை பெயர்குறித்து நியமித்தல். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *தத்துவமளிக்கப்பட்ட அலுவலரின் வகுப்பு* | *எந்தக் காடுபேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் தத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்த காடுபேணல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு* | *அளிக்கப்பட்ட தத்துவங்களின் தன்மைபற்றிய சுருக்கமான விபரணம்* |
| | *24(1)(ஐ)* | எந்தக் காணியிலும் அரசிற்குச் சொந்தமான வெட்டுமரங்களை கொண்டுசெல்வதற்கு அதிகாரமளித்தல் அத்துடன் அத்தகைய வெட்டுமரங்களை கொண்டுசெல்வதனால் அல்லது அகற்றுவதனால் ஏற்படுத்தப்பட்ட சேதங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டை ஒழுங்குபடுத்துதல். |
| | *24(1)(ஒ)* | நீர்வழிகளில் ஏற்படும் இடையூறுகளைத் தடுத்தல். |
| | *24(1)(ஓ)* | நீர்வழித்தடைகளை அகற்றுதல் மற்றும் தடைகளை அகற்றும் செலவுத் தொகையை மீளப்பெறுதல். |
| | *24(1)(ஔ)* | மரம் அறுக்கும் குழிகளை அல்லது மரம் அறுக்கும் ஆலைகளை தாபிப்பதற்கும் மற்றும் அடையாளமிடுவதற்கான சுத்தியல்களை உடைமையில் வைத்திருப்பதற்கு அல்லது கொண்டுசெல்வதற்கு அனுமதி வழங்கல். |
| | *30(2)* | பிரிவு 30 (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள சேகரித்த வெட்டுமரங்களை எடுத்துச்செல்லக்கூடிய இடங்களை பெயர்குறித்தல். |
| | *31* | பிரிவு 30 இன்கீழ் சேகரிக்கப்பட்ட வெட்டுமரம் தொடர்பான பகிரங்க அறிவித்தலை வழங்குதல். |
| | *32* | பிரிவு 30 இன்கீழ் சேகரிக்கப்பட்ட வெட்டுமரங்கள் தொடர்பாக விசாரணை நடாத்துதல் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் பற்றி தீர்மானம் எடுத்தல். |
| | *35* | வெட்டுமரங்களை சேகரிப்பதற்கும், கொண்டுசெல்வதற்கும், களஞ்சியப்படுத்துவதற்கும் அல்லது கையுதிர்ப்பதற்குமான செலவுகளுக்கான கொடுக்குமதிக் கொடுப்பனவுகயை பெற்றுக்கொள்ளல். |
| | *41* | விளக்கம் ஒன்றின் முடிவில் வெட்டுமரங்களை அல்லது வன உற்பத்திப் பொருட்களை உடைமையில் கொள்ளுதல். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| | *தத்துவமளிக்கப்பட்ட அலுவலரின் வகுப்பு* | *எந்தக் காடுபேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் தத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்த காடுபேணல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு* | *அளிக்கப்பட்ட தத்துவங்களின் தன்மைபற்றிய சுருக்கமான விபரணம்* |
| | | *42* | பிரிவு 37 இன்கீழ் கைப்பற்றப்பட்ட ஆதனத்தை நேரடியாக விற்பனைசெய்தல் அல்லது பாதுகாப்பை ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் கைப்பற்றுகையிலிருந்து விடுவித்தல். |
| | | *45* | பிரிவு 37 இன்கீழ் கைப்பற்றப்பட்ட ஆதனத்தை விடுவித்தல் மற்றும் குற்றச்சாட்டுகளை மீளப்பெறுதல். |
| | | *51* | காட்டுத் தவறுகளை கூட்டுதலும் நட்டஈட்டை ஏற்றுக்கொள்ளுதலும். |
| | | *59(1)(இ)* | காட்டுத் தவறுகள் தொடர்பில் விசாரணை நடாத்துதல் மற்றும் அத்தகைய விசாரணைகளை நடாத்தும்போது சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதலும் பதிவுசெய்தலும். |
| | | *69* | அரசிற்கு பணம் செலுத்தப்படவேண்டிய ஏதேனும் காட்டு விளை பொருளாக இருப்பின் அத்தகைய காட்டு விளை பொருட்களை உடைமையில் வைத்துக் கொள்ளுதல், தடுத்துவைத்தல் மற்றும் விற்பனை செய்தல். |
| *3.* | வனத்துறையினர்கள், காட்டு வீச்சு அலுவலர்கள், மேலதிக காட்டு வீச்சு அலுவலர்கள் | *24(1) (எஎ)* | இடைப்பெயர்வில் கைப்பற்றப்பட்ட வெட்டுமரங்கள் அல்லது காட்டு உற்பத்திப்பொருட்கள் கொண்டுவரப்படக்கூடியதாக இருக்கும் இடங்களை பெயர்குறித்து நியமித்தல். |
| | | *24(1) (ஓ)* | நீர்வழிகளின் தடைகளை அகற்றுதல் |
| | | *24(1) (ஔ)* | பதிக்கும் சுத்தியலைக் கொண்டுசெல்வதற்கும் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்குதல். |
| | | *24(1)(ங)* | பிரிவு 24(1)(ங) என்பதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினை மீறி மிதக்க விடப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருட்களை தடுத்துவைத்தல். |
| | | *30(2)* | பிரிவு 30(1) இல் குறிப்பிடப்பட்ட சேகரித்த வெட்டுமரத்தை கொண்டுவரக்கூடிய நிலையங்களை பெயர்குறித்தல். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| | *தத்துவமளிக்கப்பட்ட அலுவலரின் வகுப்பு* | *எந்தக் காடுபேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் தத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்த காடுபேணல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு* | *அளிக்கப்பட்ட தத்துவங்களின் தன்மைபற்றிய சுருக்கமான விபரணம்* |
| | | *41* | விளக்கத்தின் முடிவின்மீது ஆதனத்தின் உடைமையை எடுத்தல். |
| | | *45* | கைப்பற்றப்பட்ட ஆதனத்தை விடுவித்தல் மற்றும் குற்றச்சாட்டுகளை மீளப்பெறுதல். |
| | | *59(1)(இ)* | வனக் குற்றங்கள் தொடர்பில் விசாரணையை நடாத்துதல் மற்றும் அத்தகைய விசாரணையை நடாத்தும்போது சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் அவற்றைப் பதிவுசெய்தல். |
| *4.* | *முறையான காட்டு அலுவலர்கள் மற்றும் காட்டு வெளிக்கள உதவியாளர்கள்.* | *24(1) (ஓ)* | *நீர்வழிகளின் தடைகளை அகற்றுதல்* |
| | | *24(1) (ஔ)* | *பதிக்கும் சுத்தியலை கொண்டுசெல்லுதலும் பயன்படுத்துதலும்.* |
| | | *24(1)(ங)* | *பிரிவு 24(1)(ங) வின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினை மீறி மிதக்க விடப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருட்களை தடுத்துவைத்தல்.* |
| | | *59(1)இ)* | காட்டுத் தவறுகள் தொடர்பில் விசாரணையை நடாத்துதல் மற்றும் அத்தகைய விசாரணையை நடாத்தும்போது சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் அவற்றைப் பதிவுசெய்தல். |
| *5.* | பெருந்தோட்ட காவலாளர்கள் மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்கள். | *24(1) (ஓ)* | *நீர்வழிகளின் தடைகளை அகற்றுதல்* |
| | | *24(1)(ங)* | *பிரிவு 24(1)(ங) என்பதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினை மீறி மிதக்க விடப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருட்களை தடுத்துவைத்தல்.* |
| *6.* | *அரசமரக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர்கள், உதவிப் பொது முகாமையாளர்கள், பிரதி முகாமையாளர்கள், பிராந்திய முகாமையாளர்கள், பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் உதவிப் பிராந்திய முகாமையாளர்கள்.* | *24(1) (ஓ)* | *நீர்வழிகளின் தடைகளை அகற்றுதல்* |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| | *தத்துவமளிக்கப்பட்ட அலுவலரின் வகுப்பு* | *எந்தக் காடுபேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் தத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்த காடுபேணல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு* | *அளிக்கப்பட்ட தத்துவங்களின் தன்மைபற்றிய சுருக்கமான விபரணம்* |
| | | 24(1) (ஔ) | பதிக்கும் சுத்தியலை கொண்டுசெல்வதற்கும் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்குதல். |
| | | 24(1)(ங) | பிரிவு 24(1)(ங) வின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினை மீறி மிதக்க விடப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருட்களை தடுத்துவைத்தல். |
| | | 27 | இடப்பெயர்விலுள்ள வெட்டுமரம் மற்றும் காட்டு விளைபொருட்களை நிறுத்திவைத்தல் மற்றும் பரிசோதித்தல் அத்துடன் கையாளுதல். |
| | | 37 | பறிமுதல் செய்யவேண்டிய ஆதனத்தை கைப்பற்றுதல். |
| | | 48 | நீதிவான் ஒருவரின் கட்டளை இன்றியும் மற்றும் ஆணை இன்றியும் கைதுசெய்தல். |
| 7. | அரசமரக் கூட்டுத்தாபனத்தின் மரச்சாலை அலுவலர்கள் | 24(1) (ஔ) | பதிக்கும் சுத்தியல்களைக் கொண்டுசெல்லுதல் மற்றும் பயன்படுத்துதல். |
| 8. | அரசமரக் கூட்டுத்தாபனத்தின் கூபே (coupe) அலுவலர்கள் | 24(1) (ஓ) | நீர்வழிகளின் தடைகளை அகற்றுதல் |
| | | 24(1) (ஔ) | பதிக்கும் சுத்தியல்களைக் கொண்டுசெல்லுதல் மற்றும் பயன்படுத்துதல். |
| | | 27 | இடப்பெயர்விலுள்ள வெட்டுமரம் மற்றும் காட்டு விளைபொருட்களை நிறுத்திவைத்தல் மற்றும் பரிசோதித்தல் அத்துடன் கையாளுதல். |
| | | 37 | பறிமுதல் செய்யவேண்டிய ஆதனத்தை கைப்பற்றுதல். |
| | | 48 | நீதிவான் ஒருவரின் கட்டளை இன்றியும் மற்றும் ஆணை இன்றியும் கைதுசெய்தல். |
| 9. | மாவட்டச் செயலாளர்கள் பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்கள் | 24(1) (எ) | இடைப்பெயர்வில் கைப்பற்றப்பட்ட வெட்டுமரங்களை அல்லது காட்டு உற்பத்திப்பொருட்களை கொண்டுவரப்படக்கூடிய இடங்களை பெயர்குறித்து நியமித்தல். |
| | | 24(1)(ஐ) | எந்தக் காணியிலும் அரசிற்கு சொந்தமான வெட்டுமரத்தை கொண்டுசெல்ல அதிகாரமளித்தல். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *தத்துவமளிக்கப்பட்ட அலுவலரின் வகுப்பு* | *எந்தக் காடுபேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் தத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்த காடுபேணல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு* | *அளிக்கப்பட்ட தத்துவங்களின் தன்மைபற்றிய சுருக்கமான விபரணம்* |
| | *24(1)(ஒ)* | நீர்வழிகளில் ஏற்படும் இடையூறுகளைத் தடுத்தல். |
| | *24(1)(ஓ)* | நீர்வழிகளின் தடைகளை அகற்றுதல் மற்றும் வெட்டுமரம் அல்லது காட்டு விளைபொருட்களை விற்பனைசெய்தல் அதற்காக செலவளித்த பணத்தை வசூலித்தல். |
| | *24(1) (ஔ)* | பதிக்கும் சுத்தியல்களைக் கொண்டுசெல்வதற்கும் பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்குதல். |
| | *24(1)(ங)* | பிரிவு *24(1)*(ங) வின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியினை மீறி மிதக்க விடப்பட்ட அல்லது களஞ்சியப்படுத்தப்பட்ட வெட்டுமரத்தை அல்லது காட்டு விளைபொருட்களை தடுத்துவைத்தல். |
| | *27* | இடப்பெயர்விலுள்ள வெட்டுமரம் மற்றும் காட்டு விளைபொருட்களை நிறுத்திவைத்தல் மற்றும் பரிசோதித்தல் அத்துடன் கையாளுதல். |
| | *28* | தனியார் வெட்டு மரச்சாலைகளில் அடையாளமிட்ட வெட்டு மரங்கள், பதிவேடுகள், மற்றும் ஆதனத்தின் இருப்புக்களைச் சரிபார்த்தல் மற்றும் வெட்டுமரச்சாலைகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட வெட்டுமரத்தை கையாளுதல். |
| | *30(2)* | பிரிவு *30(1)* இல் குறிப்பிடப்பட்ட சேகரிக்கப்பட்ட வெட்டுமரங்களைக் கொண்டுவரப்படவிருக்கும் இடங்களைப் பெயரிடுதல். |
| | *32* | பிரிவு 30 இன்கீழ் சேகரிக்கப்பட்ட வெட்டுமரங்கள் தொடர்பாக விசாரணை நடாத்துதல் மற்றும் உரிமைக் கோரிக்கைகள் பற்றி தீர்மானம் எடுத்தல். |
| | *37* | பறிமுதல் செய்யவேண்டிய ஆதனத்தை கைப்பற்றுதல். |
| | *48* | நீதிவான் ஒருவரின் கட்டளை இன்றியும் மற்றும் ஆணை இன்றியும் கைதுசெய்தல். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *தத்துவமளிக்கப்பட்ட அலுவலரின் வகுப்பு* | *எந்தக் காடுபேணல் கட்டளைச்சட்டத்தின்கீழ் தத்துவம் வழங்கப்படுகின்றதோ அந்த காடுபேணல் கட்டளைச்சட்டத்தின் பிரிவு* | *அளிக்கப்பட்ட தத்துவங்களின் தன்மைபற்றிய சுருக்கமான விபரணம்* |
| 10. மாவட்ட காணி அலுவலர்கள், காணி அலுவலர்கள், கச்சேரி நிலஅளவையாளர்கள், கிராம அலுவலர்கள் காணி ஆணையாளர் திணைக்களத்தின் காலனி அலுவலர்கள் | 27 | இடப்பெயர்விலுள்ள வெட்டுமரம் மற்றும் காட்டு விளைபொருட்களை நிறுத்திவைத்தல் மற்றும் பரிசோதித்தல் அத்துடன் கையாளுதல். |
| | 37 | பறிமுதல் செய்யவேண்டிய ஆதனத்தை கைப்பற்றுதல். |
| | 48 | நீதிவான் ஒருவரின் கட்டளை இன்றியும் மற்றும் ஆணை இன்றியும் கைதுசெய்தல். |
| 11. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி, பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர்கள், வனசீவராசிகள் வீச்சாளர்கள், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவி வனசீவராசிகள் வீச்சாளர்கள். | 24(1) (எள) | இடைப்பெயர்வில் கைப்பற்றப்பட்ட வெட்டுமரங்கள் அல்லது காட்டு உற்பத்திப்பொருட்கள் கொண்டுவரப்படக்கூடிய இடங்களை பெயர்குறித்து நியமித்தல். |
| | 27 | இடப்பெயர்விலுள்ள வெட்டுமரம் மற்றும் காட்டு விளைபொருட்களை நிறுத்திவைத்தல் மற்றும் பரிசோதித்தல் அத்துடன் கையாளுதல். |
| | 37 | பறிமுதல் செய்யவேண்டிய ஆதனத்தை கைப்பற்றுதல். |
| | 48 | நீதிவான் ஒருவரின் கட்டளை இன்றியும் மற்றும் ஆணை இன்றியும் கைதுசெய்தல். |
| 12. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வனசீவராசி பாதுகாவலர்கள் | 27 | இடப்பெயர்விலுள்ள வெட்டுமரம் மற்றும் காட்டு விளைபொருட்களை நிறுத்திவைத்தல் மற்றும் பரிசோதித்தல் அத்துடன் கையாளுதல். |
| | 37 | பறிமுதல் செய்யவேண்டிய ஆதனத்தை கைப்பற்றுதல். |
| | 48 | நீதிவான் ஒருவரின் கட்டளை இன்றியும் மற்றும் ஆணை இன்றியும் கைதுசெய்தல். |

EOG 08 - 0205/6

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.